டெரிக் பிரின்ஸ்

விசுவாசமும் கிரியையும்

Derek Prince Ministries - India

"VISUVASAMUM KIRIYAIYUM"

Printed by Derek Prince Ministries

TAM/5000/0923/LOP

ISBN 978-93-92947-18-6

"FAITH AND WORKS" (Tamil)
"**VISUVASAMUM KIRIYAIYUM**"

Published by permission in the Tamil language.

For orders & other enquiries please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in

Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

Derek Prince
MINISTRIES INDIA

விசுவாசமும் கிரியையும்

நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு வேதாகம அடித்தளத்தை நாம் தொடர்ந்துபோட, விசுவாசம் பற்றிய நமது படிப்பை, புதிய ஏற்பாட்டின் மிக முக்கியமான கருப்பொருள்களில் ஒன்றுக்கு விரிவுபடுத்துகிறோம் – விசுவாசம் மற்றும் கிரியை. பவுல் ஒரு முழு நிருபத்தையும்– கலாத்தியர்களுக்கான நிருபத்தில் — இந்தக் கருப்பொருளை அர்ப்பணித்தார். இந்தத் தலைப்பைப் பற்றிய சரியான புரிதல் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்கு முற்றிலும் முக்கியமானது என்று பவுல் வலியுறுத்தினார்; இன்று நமக்கு இது எவ்விதத்திலும் குறைவானது இல்லை என்று நான் நம்புகிறேன்.

எபிரேயர் 6:1–6ல் பட்டியலிடப்பட்டுள்ள கிறிஸ்தவ அஸ்திபார உபதேசங்களின் பட்டியலில் 'தேவன் பேரில் வைக்கும் விசுவாசம்' இரண்டாவது இடத்தில் உள்ளது:

செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும்
மனந்திரும்புதல்
தேவன் பேரில் வைக்கும் விசுவாசம்

ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்

கைகளை வைக்குதல்

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல்

நித்திய நியாயத்தீர்ப்பு

மனந்திரும்புதல் வழியாய் விசுவாசம்வரை என்ற நம்முடைய முந்தைய ஆய்வில், உண்மையான விசுவாசத்தின் சில வேதாகம அம்சங்களைக் சிந்தித்தோம்.

முதலில், மனந்திரும்புதல் உண்மையான விசுவாசத்துக்கு முன்செல்ல வேண்டும். மனந்திரும்புதல் என்பது நம் மனதை மாற்றிக்கொண்டு, அதற்கேற்ற மாற்றத்தை, செயல்களில் அல்லது நம் வாழ்க்கையின் திசையில் கொண்டுவருவதாகும். இது அடிப்படையில் நம்மீது நம்பிக்கை வைப்பதிலிருந்து மாறி, நம் வாழ்வின் மீது இயேசு கிறிஸ்துவின் இறையாண்மையை அங்கீகரிப்பதாகும்.

இரண்டாவதாக, உண்மையான விசுவாசத்தின் நான்கு அம்சங்களைக் கவனித்தோம்.

1. விசுவாசம் என்பது காணப்படாதவைகளுடன் தொடர்புடையது. “நாம் தரிசித்து நடப்பவர்கள் அல்ல, விசுவாசித்து நடக்கிறோம்” (2 கொரிந்தியர் 5:6) என்று வேதம் கூறுகிறது. நாம் பார்க்க முடிந்தால், நமக்கு விசுவாசம் தேவையில்லை. எனவே விசுவாசம் எப்பொழுதும் கண்காணாத உலகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது.

2. விசுவாசம் முதன்மையான குணம். விசுவாசம் என்பது சரியான கோட்பாடோ

அல்லது உணர்ச்சிப்பூர்வமான ஆர்வமோ அல்ல. விசுவாசம் இதயத்தில் இருந்து வருகிறது. அது இயேசுவின் வார்த்தைகளை நம்புவதற்கு தொடர்வது அல்லது 'உண்மையாக' இருப்பதாகும்.

3. விசுவாசம் அறிக்கையைக்கொண்டு வருகிறது. உண்மையான விசுவாசம், நாம் உண்மை என்று நம்புவதையே வாயால் பேச வைக்கும். நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியராகிய இயேசு, நாம் அறிக்கை செய்யும் காரியங்களில் மட்டுமே, பிரதான ஆசாரியராக செயல்படுவார்.

4. விசுவாசம் சோதிக்கப்படும். சோதிக்கப்படாத விசுவாசம் தேவனுடைய பார்வையில் மதிப்புடையதல்ல. நம் விசுவாசத்தின் சோதனையை நாம் மகிழ்ச்சியுடன் அணுக வேண்டும்—அச்சத்துடன் அல்ல. ஏன்? ஏனென்றால் தேவன் நம்மில் மிகவும் விலையேறப்பெற்ற ஒன்றை—உண்மையான விசுவாசம் என்னும் தங்கத்தை—நமக்குள் செயல்படுத்துகிறார்.

விசுவாசம் மற்றும் கிரியை என்ற தலைப்புக்கு திரும்பி, இவை புதிய ஏற்பாட்டில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் இரண்டு எளிய வார்த்தைகள் என்று பார்க்கிறோம். ஆயினும், தேவனுடைய மக்களில் எத்தனைப் பேருக்கு விசுவாசத்திற்கும் கிரியைகளுக்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றிய தெளிவான புரிதல் இல்லை என்பது உண்மையிலேயே ஆச்சரியமாக இருக்கிறது.

விசுவாசம் என்பது 'நாம் நம்புகின்றவை' என்று அர்த்தம் கூறுகிறோம். கிரியைகள் என்றால் 'நாம் செய்கின்றவை' என்று அர்த்தம். இந்த

ஆய்வு முதன்மையாக நாம் நம்புவதற்கும் நாம் செய்வதற்கும் இடையே உள்ள சரியான உறவைக் கையாளும்.

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம்

நம்மில் பலர் "சுவிசேஷம்" என்கிற வார்த்தையைப் பயன்படுத்தி, அதைக் குறித்து சந்தேகம் இல்லாமல் மிகத் தெளிவாக அறிந்திருக்கும் ஒன்றைப்போல பேசுகிறோம். உண்மையைச் சொன்னால் அநேகர் சுவிசேஷத்தைக் குறித்து பேசுகிறார்கள். ஆனால் சுவிசேஷம் இன்னதென்று அறியாமலேயே பேசுகிறார்கள். 1 கொரிந்தியரில் பவுல் சுவிசேஷம் இன்னதென்று மிகத் தெளிவாக கூறுகிறார்:

> அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.
>
> 1 கொரிந்தியர் 15:1-2

பவுல் தொடர்ந்து சுவிசேஷத்தை மூன்று எளிமையான சரித்திர உண்மைகளாக கூறுகிறார்:

> நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில்

உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்.

வசனம் 3-5

சுவிசேஷம் மூன்று எளிமையான உண்மைகளில் அடங்கியுள்ளது: கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், அவர் அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்பப்பட்டார். இந்த உண்மைகள் சொல்லப்படாவிட்டால் சுவிசேஷம் அறிவிக்கபடவில்லை. இன்றைக்கு அதிக அளவில், சுவிசேஷமே இல்லாத, சுவிசேஷ பிரசங்கம் என்று அழைக்கப்படும் பிரசங்கங்கள் இருக்கின்றன. அதில் பெரிய அளவிலான சத்தியத்தையும் அற்புதமான பிரசங்கத்தையும் கொண்டிருக்கக்கூடும், ஆனால் பவுலின் கூற்றுப்படி இந்த மூன்று அடிப்படை உண்மைகளைக் கொண்டிருக்கவில்லை என்றால், அது சுவிசேஷம் அல்ல. சுவிசேஷத்தை விசுவாசிக்க நாம் பிடித்துக்கொள்ள வேண்டிய மூன்று மிக முக்கியமான உணமைகள் இவைதான்: கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், அவர் அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாம் நாளிலே உயிரோடு எழுந்தார்.

இயேசுவின் உயிர்த்தெழுதலை உறுதி செய்கினற முதல் அதிகாரப்பூர்வமான சாட்சி (4ம் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது), அவர் உயிரோடு எழுந்தவுடன் அவரைக் கண்டவர்கள் அல்ல, மாறாக, அது "வேதத்தின் வசனங்கள்" தான். வேதம்தான் உறுதியான அதிகாரமுள்ளது. பவுல் இரண்டு முறை "வேதவாக்கியங்களின்படி" என்று சொல்லுகிறார். அதற்குப்பின்பு உயிர்த்தெழுதலுக்கு சாட்சிகளாய்

இருந்தவர்களை அவர் பட்டியலிடுகிறார். ஆனால் விசுவாசத்தின் எல்லாக் காரியங்களிலும், இறுதியான அதிகாரம் வேதத்திற்குத்தான் உண்டு என்பதை மனதில் கொள்ளுங்கள்.

1 கொரிந்தியர் 15:1–2 ல் பவுல் இந்த எளிய உண்மைகளை விசுவாசத்தால் பெற்றால், நாம் இரட்சிக்கப்படுவோம் என்று அறிவிக்கிறார். மேலும், கிரியைகள் இல்லாமல், எளிய விசுவாசத்தினாலே நாம் சுவிசேஷத்தைப் பெறும்போது, நீதி நமக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று பவுல் மிகத் தெளிவாகக் கூறுகிறார்; அதாவது நம்மை நீதிமான்களாக எண்ணுவார். தேவன் தாமே நம்மை நீதிமான்களாக அறிவிப்பார். நாம் என்ன செய்கிறோம் என்பதினால் அல்ல, நாம் என்னத்தை நம்புகிறோம் என்பதினால்தான் என்று பவுல் கூறுவதை நாம் முக்கியமாக பார்க்க வேண்டும். கிரியைகளினாலே அல்ல, விசுவாசத்தினால் தான்.

கிரியைகளினால் அல்ல

ரோமர் 4ம் அதிகாரத்தில் நாம் ஆபிரகாமிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடத்தைப் பவுல் எடுத்துச் சொல்லுகிறார். ஆபிரகாமின் நீதி விசுவாசத்தினால் அவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது என்றும், ஆபிரகாம் செய்த எந்தக் கிரியைகளாலும் அல்ல என்றும் அது கூறுகிறது.

> அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்? ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில்

> மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்கு முன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை. வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது. கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும்.
>
> ரோமர் 4:1—4

இந்தப் பகுதியில் பவுல் ஆபிரகாமின் சாட்சியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் விசுவாசம் மற்றும் கிரியைகள் பற்றிய ஒரு பாடத்தை முன்வைக்கிறார். நீங்கள் ஒருவருக்கு வேலை செய்து, சம்பளத்தைப் பெற்றால், அது கிருபை அல்ல, அது உங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் நீதியை நாம் கிரியைகளினாலே பெறுவதில்லை என்று பவுல் கூறுகிறார். நீதி நாம் சம்பாதிக்கக்கூடிய ஒன்றல்ல.

அதற்குப்பின் பவுல் ஒரு வியப்பூட்டும் வாக்கியத்தை 5ம் வசனத்தில் சொல்லுகிறார். நீங்கள் வேதத்தை வாசித்து, அதில் உள்ளவைகளினாலே வியப்படையவில்லை என்றால், நீங்கள் உண்மையாய் வேதத்தை வாசித்ததில்லை. இதைப் பற்றி நாம் உண்மையிலேயே சிந்தித்தால் இங்கே பவுலின் கூற்று நம்மை ஆச்சரியப்படுத்த வேண்டும்:

> ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.
>
> ரோமர் 4:5

ஆகையால் உங்கள் விசுவாசம் உங்களுக்கு நீதியாக எண்ணப்பட வேண்டுமானால் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் என்ன? வேலை செய்கிறதை நிறுத்துங்கள். "கிரியை செய்யாதவனுக்கு" நீங்கள் செய்கிற காரியத்தினாலே அதைச் சம்பாதித்து விடலாம் என்று நினைக்கும் அளவும், நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ள முடியாது.

மதவாதிகளால் புரிந்துகொள்ள முடியாத கடினமான உண்மை இதுதான். ஏனென்றால், தேவனுடைய தயவைப் பெற நாம் ஏதாவது செய்யவேண்டும் என்ற கருத்து அவர்களுக்குள் ஆழமாய் பதிந்துவிட்டது. தயவையும் கிருபையையும் நாம் சம்பாதிக்க முடியாது. தேவனால் நீங்கள் நீதிமானாக எண்ணப்பட வேண்டுமானால், முதலாவது முயற்சி செய்வதை நீங்கள் விட்டுவிட வேண்டும். கிரியை செய்யாதீர்கள். இது அநேகருக்கு வியப்பூட்டும் வார்த்தையாக இருக்கலாம். ஆனால் வேதம் ஒரு வியப்பூட்டும் புஸ்தகம்தான்.

விசுவாசத்திற்கும் கிரியைக்கும் இடையிலான உறவு

விசுவாசத்திற்கும் கிரியைகளுக்கும் இடையிலான உண்மையான உறவு அவை பின்வரும் வரிசையால் வரையறுக்கப்படுகிறது: முதலில் விசுவாசம், பின்னர் கிரியை. கிரியை முக்கியமற்றவை என்பதல்ல. ஆனால் அவை உண்மையான விசுவாசத்தைப் பின்பற்றுகின்றன. அவைகள் ஒருபோதும் அதற்கு முன் வருவதில்லை. எபேசியர் 2ல் உள்ள விசுவாசம் மற்றும் செயல்கள் பற்றிய பவுலின் கூற்றைக் கவனியுங்கள்:

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;

எபேசியர் 2:8—9

நமக்கு இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசம் இருக்கிறது என்று கூட நாம் பெருமை பாராட்ட முடியாது. ஏனென்றால் நமக்கு விசுவாசமே தேவன் கொடுத்ததினால்தான் உண்டாயிருக்கிறது. நாம் உண்டாக்கக்கூடிய ஒன்றல்ல விசுவாசம். மனித முயற்சியில் வேரூன்றியிருப்பதால், எந்த வகையான செயல்களிலிருந்தும் இரட்சிப்பு வர முடியாது என்று பவுல் இங்கே கூறுகிறார். இது இறுதியில் நம் பங்கில் பெருமையை வளர்க்கும்.

பல இடங்களில் வேதாகமம் தங்கள் செயல்களால் நீதிமான்களாக்கப்பட்டதாக நம்பும் மக்களைப் பற்றிப் பேசுகிறது. ஆனால், அவர்கள் பெருமை பாராட்டாதபடி, கிரியைகளின் மூலம் நீதி வருவதற்குத் தேவன் அனுமதிக்கவில்லை என்று பவுல் கூறுகிறார். கிரியைகளின் மதம் மனித பெருமையை வளர்க்கிறது, இது மிகப்பெரிய அடிப்படைப் பாவம். நீதிமான்களாக்கப்படுவதற்கு பெருமையை ஊக்குவிக்காத வழியைத் தேவன் ஏற்படுத்தி இருக்கிறார்.

மிக குழப்பமான மதங்களைப் பின்பற்றுகிறவர்களைச் சிந்தித்துப்பாருங்கள். அவர்கள் மதம் எவ்வளவு கடினமானதோ, அவ்வளவு அதிகமாக அவர்கள் பெருமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் கடினமான, கஷ்டமான

காரியங்களை செய்துகொண்டிருப்பார்கள்: விரதம் இருப்பது, பலிசெலுத்துவது போன்றவைகள். இறுதியில் இவை பெருமையை ஊக்குவிக்கிறது. “தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையை அளிக்கிறார்” (யாக்கோபு 4:6). ஆகையால், நம்முடைய பெருமையை ஊக்குவிக்காத விதத்தில் நாம் அவரிடத்தில் நீதிமான்களாய் இருக்க தேவன் ஒரு வழியை நியமித்திருக்கிறார்.

எப்போதுமே சட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிற சட்டரீதியான கிறிஸ்தவர்கள், அன்பானவர்களாய் இருக்க மாட்டார்கள் என்பதை நீங்கள் கவனித்து இருக்கலாம். அவர்களிடம் அன்பைத் தேடிப் போனீர்களானால் அதிகம் கிடைக்காது. சட்டமும் அன்பும் கிட்டத்தட்ட ஒன்றுக்கு ஒன்று எதிர்மறையானது. ஆகையால் பெருமையை ஊக்குவிக்கிற எந்தக் காரியத்தையும் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். தேவனுடைய கிருபை அல்லாத மதமாய் இருந்தால், நம்முடைய பெருமையை ஊக்குவிக்கிறது.

ஆனால் கிரியைகளுக்கு ஒரு இடம் உண்டு. அவைகள் முக்கியத்துவமற்றவைகள் அல்ல. நாம் நம்பிக்கை மற்றும் கிரியைகளை சரியான வரிசையில் பெற வேண்டும். கிரியைகளைத் தவிர்க்கும் கிருபையின் இந்த அறிவிப்பிற்குப் பிறகு, பவுல் எபேசியர் 2:10 இல் கிரியைகளின் இடத்தை விளக்குகிறார்:

ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு,

தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

வேதம் சொல்லுகிறது "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புதிய சிருஷ்டியாயிருக்கிறான்" (2 கொரிந்தியர் 5:17). தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் புதிதாக சிருஷ்டித்தவுடன், அந்தப் புதிய சிருஷ்டிக்காக ஏற்ற கிரியைகளை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார். ஆனால் பழைய ஜென்ம சுபாவம் தேவன் ஆயத்தம்பண்ணின நற்கிரியைகளில் நடைபோட முடியாது. நற்கிரியைகளில் நடைபோடும் முன் விசுவாசத்தினால் நீங்கள் புதிதாக்கப்பட வேண்டும். நாம் புதிய சிருஷ்டிகளாக மாறியவுடன் நற்கிரியைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாய் மாறுகின்றன. ஆனால் வரிசை சரியாக இருக்க வேண்டும். முதலாவது, விசுவாசத்தினால் புதுசிருஷ்டி, அதன் பின்பு தேவன் நமக்காக ஆயத்தம்பண்ணின நற்கிரியைகள்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாய் இருந்தால், தேவனுக்காக என்ன செய்ய வேண்டுமென்று திட்டமிட தேவையில்லை. ஏனென்றால் தேவன் ஏற்கெனவே இதைத் தீர்மானித்துவிட்டார். தேவன் உங்களுக்காக முன்னதாகவே ஆயத்தம் செய்த அந்தக் கிரியைகள் என்ன என்பதைக் கண்டுபிடித்தால் மட்டும் போதும். உங்கள் வாழ்க்கைக்கு நீங்களே ஒருதிட்டம்தீட்டாதீர்கள். தேவனுடையதிட்டம்என்ன என்பதைக் கண்டு பிடியுங்கள். பல நேரங்களில் நாம் எதிர்பார்க்கும் காரியத்திலிருந்து இது மிகவும் வித்தியாசமாக இருக்கும்.

என்னுடைய அனுபவத்திலிருந்து ஒரு சிறிய உதாரணத்தை நான் எடுத்துச் சொல்லுகிறேன். நான் என் வீட்டில் ஒரே பிள்ளை. எனக்கு முக்கியமாக சகோதரிகள் யாருமே இல்லை. ஒன்பது வயதிலிருந்து, இருபத்தைந்து வயது வரையிலும் நான் ஆண்கள் மட்டும் தங்கி படிக்கும் போர்டிங் பள்ளிகளில்தான் வளர்ந்தேன். பெண்களை நான் சந்திப்பது மிகஅரியது. ஒரு சில பெண் நண்பர்கள் மட்டும் தான் எனக்கு இருந்தார்கள். பெண்கள் என்றாலே எனக்குப் புரியாத ஓர் புதிர். அவர்களோடு எப்படிப்பட்ட சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூட எனக்குத் தெரியாது. ஆனால் தேவன் என்னை அழைத்தபோது, நான் ஒரு சிறுவர்கள் இல்லம் வைத்திருந்த பெண்மணியைத் திருமணம் செய்தேன். அவர்களைத் திருமணம் செய்த அதே நாளிலே அவர்கள் விடுதியிலிருந்த எட்டுப் பெண் பிள்ளைகளை, தத்தெடுத்து தகப்பனானேன்! டெரிக் பிரின்ஸ்க்கு இது ஏற்ற காரியமல்லவென்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். என் வாழ்க்கையை நானே திட்டமிட்டிருந்தால் இதற்குள் வந்திருக்கமாட்டேன். ஆனால் அதுதான் தேவன் முன்னதாகவே நான் நடப்பதற்கு, எனக்கென்று ஆயத்தம் பண்ணின நற்கிரியைகள்.

நான் அநேக முறை தவறுகளை செய்திருந்தாலும், தேவன் எனக்காக ஆயத்தம் பண்ணின நற்கிரியைகளில் நான் நடந்தேன் என்பதில் எனக்கு மிகுந்த திருப்தியுண்டு. தேவன் எனக்காக ஆயத்தம் செய்த வாழ்க்கை, நான் சொந்தமாக உருவாக்கிய எதையும் விட மிகவும் அற்புதமானது மற்றும் உற்சாகமானது என்று நான் நேர்மையாகச் சொல்ல வேண்டும்.

இதனால்தான், நமக்காக தேவனுடைய கிரியைகளைச் சந்திப்பதற்கு முன், விசுவாசத்தின் மூலம் ஒரு புதிய சிருஷ்டியாக நாம் மாற வேண்டும். நமது ஜென்ம சுபாவத்தைக்கொண்டு வரக்கூடிய எதையும் விட அவருடைய செயல்கள் எப்போதும் சிறந்தவை.

கிருபையின் தன்மை

நாம் இப்போது கிருபையை வரையறுக்க வேண்டும். இங்கே நமக்குத் தெளிவான சிந்தை தேவை. உண்மை என்னவென்றால் எப்போதும் நமக்குத் தெளிவான சிந்தை தேவை!

கிருபை என்பது அழகான ஒரு வார்த்தை. ஆனால் அடிக்கடி துர்பிரயோகம் செய்யப்படுகிறது. ஒரு சபையில் நான் பிரசங்கித்துக்கொண்டிருக்கும் போது "'கிருபை' சபைகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் சபைகள் பல நேரத்தில் கிருபை என்னவென்றே அறிவதில்லை" என்று சொன்னேன். அப்போது தான் அப்படிப்பட்ட ஒரு சபையில் நான் பேசிக்கொண்டிருக்கிறேன் என்ற உண்மையை உணர்ந்துகொண்டேன்! ஆனாலும் இது உண்மையாகதான் இருக்கிறது. அந்தக் கூற்றில் நான் நிற்கத்தான் வேண்டும்.

கிருபை என்ற வார்த்தையை பயன்படுத்துகிற அநேகர், அதின் அர்த்தம் என்னவென்று அறியாமலேயே இருக்கிறார்கள். கிருபை என்ற வார்த்தை "சவுந்தரியம்" அல்லது "அழகு," அர்த்தங்கள் உண்டு. தேவன் தம்மில் விசுவாசம் வைக்கிற நமக்கு அழிக்கும் அழகு இது. தமது கிருபையினால் அவர் நம்மை அழகுப்படுத்துகிறார்.

பவுல் சொல்லுகிறார்:

> அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது; அப்படியல்லவென்றால், கிரியையானது கிரியையல்லவே.
>
> ரோமர் 11:6

என்னுடைய வார்த்தைகளில், "நீங்கள் கிருபையைச் சம்பாதிக்க முடியாது. நீங்கள் சம்பாதிக்கக்கூடிய எந்தக் காரியமும் கிருபையல்ல" என்று சொல்லுவேன். இது நம்மில் அநேகருக்கு தாழ்மைப்படுத்தும் காரியமாக இருக்கிறது. நாம் கிருபையைச் சார்ந்திருக்க வேண்டும். அதைச் சம்பாதிக்க முடியாது. நாம் செய்கிற எந்தக் காரியமும் தேவனுடைய கிருபையை நமக்கு பெற்றுத்தர முடியாது. நாம் தேவனின் கிருபைக்கு ஒருபோதும் தகுதியற்றவர்களாக இருக்க முடியாது. ஏனென்றால் நாம் அதற்குத் தகுதியானவர்களாக இருந்தால் – அது கிருபையாக இருக்காது!

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம்" (எபேசியர் 2:8). விசுவாசம் உங்களுக்கு உண்டென்று நீங்கள் உற்சாகமாகும் நேரத்தில் பவுல் சொல்லுகிறார்: "இது உங்களால் உண்டானது அல்ல; இது தேவனுடைய ஈவு" (வசனம் 8). நீங்கள் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டிருந்தால் பெருமைபாராட்ட உங்களுக்கு ஒன்றுமில்லை. மிகப்பெரிய பாவமாகிய பெருமையிலிருந்து உங்களை பாதுகாப்பதற்காகவே தேவன் இதைச் செய்திருக்கிறார்.

விசுவாசத்துக்கும் கிரியைகளுக்கும் உள்ள தொடர்பை நாம் சிந்திக்கப் போகிறோம்—நாம் நம்புகிறது, நாம் செய்வது. எனக்குத் தெரிந்த வரையிலும், நான் சொல்லப் போவதெல்லாம் புதிய ஏற்பாடிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் உங்களில் அநேகருக்கு இது வியப்பூட்டுகிறதாகவும், ஒருவேளை அதிர்ச்சியூட்டுகிறதாக கூட இருக்கலாம். நான் கண்டுபிடித்தது இதுதான். கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பைக் குறித்து புதிய ஏற்பாடு சொல்லும் இந்த எளிய சத்தியத்தைப் பிரசங்கிப்பதே அநேக கிறிஸ்தவர்களை வியப்பில் ஆழ்த்துகிறது.

“கிறிஸ்தவம் என்பது ஒரு சில சட்டங்களைப் பின்பற்றுவதல்ல” என்று ஒரு கூட்டத்தில் சொன்னதை நினைவுகூறுகிறேன். சொல்லிவிட்டு அந்த மக்களைப் பார்த்தபோது அவர்கள் அதிர்ச்சியடைந்திருந்ததை நான் கண்டேன். “தேவன் மரித்துபோய்விட்டார்” என்று நான் சொல்லியிருந்தால் கூட அவர்கள் அவ்வளவு அதிர்ச்சி அடைந்திருக்கமாட்டார்கள் என்று நினைக்கின்றேன். கிறிஸ்தவம் என்பது ஒரு சில சட்டங்கள் என்ற கோட்பாடுதான் அவர்களுக்கு இருந்தது.

ஒருவேளை உங்களுக்கும் இதேக் கோட்பாடு தான் இருக்கலாம். ஆனால் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். கிறிஸ்தவம் ஒரு சில சட்டங்கள் அல்ல. சட்டங்களைப் பின்பற்றுவதினால் நீதியை அடைய முடியாது.

தேவனுக்கு முன்பாக நீதி

ரோமரின் முக்கிய கருத்தே நீதி தான்—முக்கிய கேள்வி, நாம் தேவனுக்கு முன்பாக எப்படி நீதிமான்களாக முடியும்? பல நூற்றாண்டுகளுக்கு முன் யோபு வேதனையில் தேவனை நோக்கி கதறுகிறான், "தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பதெப்படி?' (யோபு 9:2). தேவனுக்கு முன்பாக ஒருவன் நீதிமானாய் இருக்க முடியும் என்ற கருத்தையே யோபுவின் மதவாதிகளாகிய நண்பர்கள் கேலி செய்தார்கள். ஆனால் தேவன் யோபுவின் கதறலைக் கேட்டு, பல ஆண்டுகள் சென்று, ரோமருக்கு எழுதின நிருபத்தின் மூலமாய் அந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார்—யோபின் நண்பர்கள் அவரை நம்ப வைக்க பிரயாசப்படட விதமல்ல — சில சட்டங்களைக் கைக்கொள்வதினால் அல்ல. நீதியானதாக இருக்க சட்டங்களைக் கடைப்பிடிப்பதைப் பற்றி பவுல் கூறுகிறார்:

> இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.
>
> ரோமர் 3:20

மூல கிரேக்கத்தில் இந்த வசனத்தில் இல்லாத இரண்டு வார்த்தைகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. "நியாயப்பிரமாணம்" என்கிற வார்த்தையை இரண்டு முறை பயன்படுத்தியிருக்கிறார்கள். பவுல் அப்படிச் சொல்லவில்லை. அவர் சொல்லுகிறார்:

> பாவத்தை அறிகிற அறிவு சட்டத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் சட்டத்தின்

> கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.

எனவே, பவுல் மோசேயின் நியாயப்பிரமாணத்தை மட்டும் குறிப்பிடாமல், எல்லாச் சட்டங்களையும், எல்லா விதிகளையும் அல்லது சுயமாக நீதியைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை வரையறுக்கும் எதையும் குறிப்பிடுகிறார். நியாயப்பிரமாணம் நம்மை நீதிமான்களாக்க முடியாவிட்டால், நீங்கள் "நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன?" என்று கேட்கலாம்.

தேவன் உங்கள் பிரச்சனையாகிய பாவத்தை வெளியே கொண்டுவர பயன் படுத்தும் கருவி தான் நியாயப்பிரமாணம். நியாயப்பிரமாணம் உங்கள் பிரச்சனையைக் கண்டறிய முடியுமே தவிர அதற்கான தீர்வைக் கொடுக்கமுடியாது. கிருபையினால் மட்டுமே தீர்வு உண்டாகும். ஆகையால் எனக்குக் கிருபை தேவை என்கிற நிலைக்கு உங்களைக் கொண்டு வர நியாயபிரமாணம் தேவை. அதுதான் நியாயப்பிரமாணத்தின் நோக்கம்.

யாக்கோபு சொல்கிறார்:

> எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், [மோசேயின் நியாயப்பிரமாணத்தை குறித்து பேசுகிறார்] ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். ஏனென்றால், விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால், நீ விபசாரஞ்செய்யாமலிருந்தும் கொலை செய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்.. யாக்கோபு 2:10—11

முழு நியாயப்பிரமாணத்தையும் கைக்கொள்ள வேண்டும், இல்லையென்றால் நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவில்லை. நியாயப்பிரமாணத்தில் தொண்ணூற்று ஒன்பது சதவீதத்தை கைக்கொள்ளுகிறது, நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளாததுக்குச் சமமாக இருக்கிறது. நியாயப்பிரமாணம் என்பது ஒரு முழுமையான ஒழுங்கு.

உண்மையில், 99 சதவீதத்திற்கு நெருங்கி நம்மில் ஒருவரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாது. பாரம்பரிய யூதர்கள், நாம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகள் 613 என்று சொல்லுகிறார்கள். தனியாக அவர்களை விசாரித்தால் 32 கட்டளைகளுக்கு மேல் அவர்கள் கடைப்பிடிப்பதில்லை என்பதை ஒத்துக்கொள்வார்கள். பூமியில் இன்று உயிரோடிருக்கிற ஒருவனாகிலும் மோசேயின் முழு நியாயப்பிரமாணத்தையும் கைக்கொள்வதில்லை. ஒரே நபரைத் தவிர அதை வேறே யாரும் முழுமையாக கைக்கொண்டதில்லை: இயேசு. அன்றைய தினத்தின் மக்களைப் பார்த்து, "உங்களில் எவன் என்னைப் பாவியாக தீர்க்கிறான்?" என்று கேட்டார் (யோவான் 8:46). ஒருவர்கூட அவருக்குப் பதில் அளிக்க முடியவில்லை. அவர் மாத்திரம்தான் நியாயப்பிரமாணத்தை முழுமையாக கைக்கொண்டார். நீங்களும் நானும் அதைச் செய்ய முடியாது.

பிரிடிட்ஷ் ராணுவத்தில் நான் இருந்த போது, இரட்சிக்கப்பட்டேன். மற்றவர்களோடு இரட்சிப்பைக் குறித்து பேச ஆரம்பித்தேன். ஆனால் நான் கண்டிபிடித்தது இதுதான்:

அவர்கள் எல்லாரும் மதத்தின் அடிப்படையில் சிந்தித்தார்கள், இரட்சிப்பை சிந்திக்கவில்லை. உடனடியாக அவர்கள் கடைப்பிடிக்கிற சட்டங்களைப் பட்டியலிடுவார்கள். அது தான் அவர்களுடைய நீதி. அவர்களுடைய சூழ்நிலைக்கேற்ப உருவாக்கப்பட்டதாயிருந்தது. அவர்கள் ஏதேனும் ஒரு தவறு செய்கிறவர்களாயிருந்தால், அந்தத் தவறை மாத்திரம் தங்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள்.

மனுஷனுடைய மனது இப்படிதான் சிந்திக்கிறது. "நான் ஒரு சில சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதினால் நீதிமானாக இருக்கிறேன்." இல்லை, நீங்கள் நீதிமான் அல்ல! நாம் எல்லாச் சட்டங்களையும் கைக்கொண்டால் அப்படி இருக்கலாம். ஆனால் நாம் அதைச் செய்வதில்லை, செய்ய முடியாது.

நியாயப்பிரமாணத்தின் ஒரு சிறு பகுதியை மட்டும் கைக்கொண்டு, அதுதான் தேவை என்று நினைக்க முடியாது. ஏனென்றால் நியாயப்பிரமாணம் முழுவதும் ஒரே முழுமையான திட்டம். ஒன்று நாம் அதை முழுவதும் கைக்கொள்ளலாம் அல்லது நாம் அதைக் கைக்கொள்ளவில்லை. நாம் அதை முழுவதும் கைக்கொண்டால், தேவன் நம்மை நீதிமானாக எண்ணுவார். ஆனால் அதைச் செய்ய முடியாத நமக்கு ஒரே மாற்றுவழி இருக்கிறது – நாம் சம்பாதிக்க முடியாத கிருபை.

ரோமர் 3:20 ற்கு திரும்புவோம்:

"இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின்

> கிரியையினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை."

ஒரு சில சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதினால் தேவனிடத்தில் நீதியைப் பெறமுடியாது. நாம் தோல்வி மட்டுமே அடைய முடியும். நம்முடைய சட்டங்கள் சரியாக இருந்தால் அவைகளை நாம் கைக்கொள்ளமுடியாது. நம்முடைய சட்டங்கள் தவறாக இருந்தால், ஒருவேளை நாம் அவற்றை கைக்கொள்ள முடியும். ஆனால் அந்தத் தவறான சட்டங்களைக் கடைப்பிடிக்கிறதினாலே நாம் நீதிமானாகிறதில்லை.

நியாயப்பிரமாணம் மற்றும் கிருபை – ஒன்றையொன்று தவிர்ப்பவை

நியாயப்பிரமாணமும், கிருபையும் முற்றிலும் தனிப்பட்டவைகள் என்பதை அறிய ஆரம்பித்தவுடன், மக்கள் அதிர்ச்சியடைய ஆரம்பிக்கிறார்கள். இரண்டிலிருந்தும் பயனைப் பெற முடியாது; ஏதாகிலும் ஒன்றைத்தான் தேர்வு செய்ய முடியும். ரோமர் 6:14 சொல்கிறது:

> நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.

இவை இரண்டும் முற்றிலும் வேறுப்பட்ட மாற்றுவழிகள். நீங்கள் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கலாம் அல்லது கிருபைக்குக் கீழாக இருக்கலாம். ஆனால் ஒரே நேரத்தில் கிருபைக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் கீழ் இருக்க முடியாது. நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தால் கிருபையின் கீழ் இல்லை. நீங்கள் கிருபையின்

கீழ் இருந்தால் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை.

பவுல் சொல்லுகிற காரியம் மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது. "நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இறாமல், கிருபையின் கீழ் இருக்கிறபடியால் பாவம் உங்களை ஆட்கொள்ளாது" என்று அவர் சொல்லுகிறார். இதின் அர்த்தம் என்னவென்றால், நீங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தால் பாவம் உங்களை மேற்கொள்ளும். பாவத்தின் ஆளுகையிலிருந்து தப்பிக்க ஒரே வழி, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சிப்பதை விட்டுவிட்டு, தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதுதான். இந்த உணர்வு அதிர்ச்சியை உண்டுபண்ணும். இதைப் படிக்கும்போது நீங்களே கொஞ்சம் அதிர்ச்சியடையலாம்.

ரோமர் 8:14ல், பவுல் சொல்லுகிறார்:

> மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

தேவனுடைய உண்மையான பிள்ளைகள் யார்? பரிசுத்த ஆவியினாலே தொடர்ந்து நடத்தப்படுகிறவர்கள்தான். ஒரு சில சட்டங்களைக் கடைப்பிடிப்பதற்கு மாற்று வழி பரிசுத்த ஆவியினாலே நடத்தப்படுவதாகும். நீங்கள் சட்டங்களைப் பின்பற்றலாம் அல்லது பரிசுத்த ஆவியினாலே நடத்தப்படலாம், ஆனால் இரண்டையும் செய்ய முடியாது.

உங்களுக்குத் தெளிவாகப் புரிய வைக்கும்படி ஒரு சிறு உதாரணம் இதோ. வேதாகம கல்லூரியிலிருந்து இப்போதுதான்

தேர்ச்சி பெற்ற வாலிபன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். இறையியலில் பட்டம் பெற்று, பலசாலியாகவும் ஆரோக்கியமுள்ளவனாகவும் இருக்கிறான். அவருடைய பட்டமளிப்புப் பயிற்சியாக, அவர் இருக்கும் இடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி நடந்தே செல்லும் சவாலைத்தேவன் அவருக்கு முன்வைக்கிறார். தேவன் அவனைப் பார்த்து, “உனக்குமுன் இரண்டு தேர்வுகளை வைக்கிறேன். இந்த வரைபடத்தை பயன்படுத்திப் போகலாம் அல்லது உன்னை அழைத்துச் செல்ல ஒரு வழிகாட்டியை அழைத்துச் செல்லலாம்” என்று சொல்லுகிறார்.

இந்த வாலிபன், “நான் அதிக திறமைசாலி, நான் இறையியலில் பட்டம் பெற்றிருக்கிறேன். வரைபடைத்தை எப்படி பயன்படுத்த வேண்டும் என்று எனக்கு நன்றாக தெரியும். நான் வரைபடத்தை பயன் படுத்துகிறேன், எனக்கு வழிகாட்டி தேவையில்லை” என்று நினைக்கிறான். அதனால் அவன் “நான் வரைபடத்தை எடுத்துக்கொள்கிறேன்; எனக்கு வழிகாட்டி தேவையில்லை’ என்று தேவனிடம் சொல்லுகிறான்.

அவன் புறப்படும்போது, சூரியன் பிரகாசிக்கிறது. குருவிகள் பாடல் பாடுகின்றன. ஆனால் மூன்று நாள் சென்றபின், இருட்டாக இருக்கிறது. நடு இரவு, ஒரு அடர்ந்த காட்டின் நடுவே, ஒரு உயர்ந்த மலையின் விளிம்பில் நிற்கிறான். வடக்கை நோக்கி நிற்கிறோமா, தெற்கை நோக்கி நிற்கிறோமா, மேற்கை நோக்கி நிற்கிறோமா, கிழக்கை நோக்கி நிற்கிறோமா, என்று அறியாமல் நிற்கிறான். ஒரு மெல்லிய சத்தம் “உனக்கு உதவி செய்யட்டுமா?” என்று

கேட்கிறது. அது யார் தெரியுமா? பரிசுத்த ஆவியானவர், வழிகாட்டி.

அவன், "பரிசுத்த ஆவியானவரே, உம்முடைய உதவி எனக்குத் தேவை!" என்று சொல்லுகிறான். பரிசுத்த ஆவியானவர் அவன் கைப்பிடித்து, இருள் வழியாக நடத்திச் சென்று, காட்டில் இருந்து வெளியேறி, அவர்கள் மீண்டும் தெளிவான பாதையில் நடக்க ஆரம்பிக்கின்றனர்.

கொஞ்ச நேரத்துக்குப் பின்பு அவன், "நான் மடத்தனமாக நடந்துகொண்டேன். நானே சமாளித்திருக்க முடியும். நான் பதற்றம் அடைந்திருக்க தேவையில்லை" என்று தனக்குள் சொல்லிக்கொள்ளுகிறான். சுற்றிப் பார்க்கிறான், அவனுடயை வழிகாட்டியைக் காணவில்லல. அவன் தனியாக இருக்கிறான்.

மூன்று நாட்களுக்குப் பின்பு அவன் சேற்றிலே சிக்கிக்கொள்ளுகிறான். அவன் எடுத்துவைக்கிற ஒவ்வொரு அடியும் அவனை இன்னும் அதிகமாக அமிழ்ந்து போகச் செய்கிறது. அந்த மெல்லிய சத்தம் மறுபடியும் "ஒருவேளை இப்போது உனக்கு என் உதவி தேவையாயிருக்கும்" என்று அவனோடு பேசுகிறது.

"ஓ பரிசுத்த ஆவியானவரே தயவுசெய்து எனக்கு உதவி செய்யும்! நீர்தான் இதிலிருந்து என்னை வெளியே கொண்டுவர முடியும்." இப்படியாக தொடர்ந்து போக வேண்டிய இடத்துக்குப் பரிசுத்த ஆவியானவரோடு நடந்து போய்கொண்டிருக்கிறான். பரிசுத்த ஆவியானவராகிய அவனுடைய வழிகாட்டியைப் பார்த்து, "உங்களுக்குத் தெரியுமா, என்னிடம் மிக சிறப்பான ஒரு வரைபடம் இருக்கிறது. அதை உங்களோடு பகிர்ந்துகொள்ளுகிறேன்" என்று சொல்லுகிறான்.

வழிகாட்டி சொல்லுகிறார், "மிக்க நன்றி, ஆனால் எனக்கு வரைபடம் தேவையில்லை, எனக்கு வழி தெரியும். அதுவுமல்ல, அந்த வரைபடத்தை உருவாக்கினவரே நான்தான்!"

தன்னந்தனியே என்னால் இதைச் செய்ய முடியாது என்று நாம் உணர எத்தனை காலம் செல்லும்? நமது நற்கிரியைகளினாலோ, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமோ நீதியை அடைய முடியாது: அது பரிசுத்த ஆவியானவரால், கிருபையின் ஆவியால் மட்டுமே வருகிறது. "பரிசுத்த ஆவியானவராலே [தொடர்ந்து] நடத்தப்படுகிறவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள்" (ரோமர் 8:14).

ஆவியினாலே நடத்தப்படுதல்

புதிய ஏற்பாட்டின் மிக மிக முக்கியமான கருப்பொருள்களில் ஒன்றை, கலாத்தியர் 5ம் அதிகாரத்தில் பவுல் மறுபடியும் தொடருகிறார். ஆவியினாலே நடக்க அறியாத எவரும் மங்கின ஒளிக்குள் வாசம் செய்கிறார்கள். மங்கின ஒளிக்குள் அநேக கிறிஸ்தவர்கள் தங்குகிறார்கள் — நியாயப்பிரமாணத்துக்கும் கிருபைக்கும் இடையில் வாழ்கிறார்கள். எது என்ன என்று அறியாமல், தேவனுடைய கிருபையை எப்படி பெற்றுக்கொள்வது என்றும் அறியாமல் வாழ்கிறார்கள். பவுல் சொல்லுகிறார்:

> ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.
>
> கலாத்தியர் 5:18

பவுல் ரோமரில் சொன்னார், "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே

நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்” (ரோமர் 8:14). ஆகையால் நாம் தேர்வு செய்யலாம். நாம் தேவனுடைய குமாரர்களாக வாழலாம், பரிசுத்த ஆவியினாலே வழி நடத்தப்படலாம், அல்லது நாம் பரிசுத்த ஆவியானவருக்கு முதுகை காட்டி, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சி செய்யலாம். இரண்டையும் இணைக்க முடியாது. புதிய ஏற்பாட்டில் பவுலின் பெரும்பாலான செய்திகளின் சாராம்சம் இதுதான். இங்கேதான் ஜனங்கள் மங்கின நிலைக்குள் நுழைகிறார்கள். பாதி கிருபையை நம்பி, பாதி தாங்கள் சுயமாய் பின்பற்றுகின்ற சட்டங்களை நம்புகிறார்கள்.

சட்டங்களைக் கைக்கொள்வது பொல்லாத காரியம் அல்ல. ஆனால், சட்டங்கள் உங்களை நீதிமானாக்குகிறதில்லை. தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்: சட்டங்களைக் கைக்கொள்வது உங்களை நீதிமானாக்காது.

நம்மில் பெரும்பாலானோர் ஏதாவது ஒரு சபை அல்லது சபை பிரிவின் அங்கத்தினராக இருக்கிறோம்— அதற்குச் சட்டங்கள் இருக்கும். நாம் எந்தப் பிரிவுக்கு உட்பட்டவர்களாய் இருக்கிறோமோ, அதின் சட்டங்களை பின்பற்றவேண்டும். சட்டங்களைப் பின்பற்ற முடியவில்லையென்றால், அங்கத்தினராக இருக்கக் கூடாது. ஆனால் சட்டங்களைப் பின்பற்றுவது உங்களை நீதிமானாக்காது— உங்களை அக்குழுவின் அங்கத்தினராக மாற்றுகிறது.

உண்மையைச் சொன்னால் சட்டங்கள்தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பிரிவினைக்கு

மிக முக்கியமான காரணமாக இருக்கிறது. ஏனென்றால் ஒவ்வொரு சபை பிரிவும் தன்னுடைய சொந்த சட்டத்திட்டங்களை உடையதாய் இருக்கிறது. அவைகள் அவர்களை மற்ற குழுக்களை விட அதிக நீதிமானாக்குகிறது என்று எண்ணுகிறார்கள். கத்தோலிக்கேயருக்கு சில சட்டங்கள் உண்டு. பாப்டிஸ்டுகளுக்குச் சில சட்டங்கள் உண்டு, ஏழாம் நாள் வருகை சபைக்குச் சில சட்டங்கள் உண்டு, பெந்தேகொஸ்தெயினருக்குச் சில சட்டங்கள் உண்டு.

இந்தக் குழுக்களில் இருப்பவர்கள், தங்கள் சட்டங்களைப் பின்பற்றுவதினால் நீதிமான்களாகிறார்கள் என்று நினைக்கிறார்கள். மற்ற மக்களைப் பார்த்து, “அவர்கள் உண்மையான நீதிமான்கள் இல்லை ஏனென்றால் நம்முடய சட்டங்களை அவர்கள் கைக்கொள்வதில்லை” என்று சொல்லுகிறார்கள். சட்டதிட்டங்கள் கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரிக்கும் பெரும் காரணமாக மாறுகிறது.

ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் சொந்த சட்டங்களை வைத்திருக்க சுதந்திரமாக உள்ளனர் – அவை வேதத்தின் அடிப்படையில் இருந்தால். ஆனால் சட்டங்களைப் பின்பற்றுவதினால் அவர்கள் யாரும் நீதிமான்களாகிறதில்லை என்பதை மனதில்கொள்ளுங்கள். அவர்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாகிறார்கள்.

சட்டங்களில் நம்முடைய கவனத்தை வைப்போமானால், விசுவாசத்தைத் தவற விட்டு, மறுபடியும் மங்கலான ஒரு நிலைக்குள் சென்றுவிடுவோம். அல்லது தனியாக வரைபடத்தை வைத்துக்கொண்டு சாதித்து

விடலாம் என்று நினைத்து, சேற்றில் சிக்கின வாலிபனைப் போல் இருப்போம்.

இதை வாசிக்கும்போது, சேற்றில் சிக்கிக்கொண்டால் எப்படி இருக்கும் என்பது உங்களில் ஒரு சிலருக்குத் தெரிந்திருக்கலாம். அது மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவர் உங்களை ஒரு சேற்று நிலத்திலிருந்து வெளியே எடுத்தார் என்பதைத் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து நீங்கள் அறிந்திருக்கலாம்.

நியாயப்பிரமாணம் பாவத்தை தூண்டுகிறது

ரோமரின் புஸ்தகம் மிக ஆச்சரியமான புஸ்தகம்— மிகவும் தர்க்கரீதியான புத்தகம். நான் ஒரு கிறிஸ்தவனாகும் முன், தர்க்கசாஸ்திர பேராசிரியராக இருந்தேன். தர்க்கசாஸ்திரத்தில் எனக்கு அதிக ஈடுபாடு இருந்தது. தர்க்க சாஸ்திரம் மிக அருமையான காரியம் என்றும் நான் எண்ணுகிறேன். அது ஒரு கணினியைப் போன்றது. சரியான தகவல்களை கணினிக்குள் செலுத்தினால், சரியான முடிவுகள் உங்களுக்குக் கிடைக்கும். தவறான தகவல்களைப் பதிவு செய்தால், தவறான முடிவுகள்தான் கிடைக்கும். தர்க்கசாஸ்திரம் சரியான பதில்களை உங்களுக்குக் கொடுப்பதில்லை. உங்கள் முடிவுகள் சரியானவைகள்தானா என்று காண உதவி செய்கிறது.

ஒரு தர்க்கவாதியாக, 'நான் இதுவரைப் படித்த எல்லாவற்றிலும், வேதம் மிகவும் தர்க்கரீதியான புத்தகம்—அதில் ரோமரின் புத்தகம் வேதத்தில் உள்ள மிகவும் தர்க்கரீதியான புத்தகங்களில் ஒன்றாகும்' என்று எனக்குள்

சொல்லிக்கொள்வேன். வேதத்தை நான் விசுவாசிக்கிறதினாலே, நான் அறிவாற்றலில் குறைந்தவன் என்று உணரவில்லை. அது என்னுடைய தனிப்பட்ட மனநிலை. நீங்களும் உங்களை அறிவாற்றலில் குறைந்தவர்களாக எண்ணாதீர்கள் என்று உங்களுக்கு ஆலோசனை சொல்லுகிறேன். வேதத்தையும், தேவனுடைய தர்க்கத்தையும் நீங்கள் உண்மையிலேயே புரிந்துகொண்டால், இதுவரை எழுதப்பட்ட புத்தகங்களில் வேதம் மிகவும் தர்க்கரீதியான மற்றும் அறிவுபூர்வமாக நிலையான புத்தகங்களில் ஒன்றாகும்.

பவுல் மற்றொரு அதிர்ச்சியூட்டும் அறிக்கையை வெளியிடும்போது, ஆழமான தர்க்கத்தைப் பயன்படுத்துகிறார். இதைப் பவுல் முதலில் செய்யாவிட்டால் நான் அதைச் செய்ய துணிந்திருக்க மாட்டேன். இது ரோமர் 7 இல் காணப்படுகிறது. (நீங்கள் பவுலுடன் மேலும் செல்ல செல்ல, அதிகமாக அதிர்ச்சியூட்டும் நபராக அவர் மாறுகிறார்.!)

> அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்.
>
> ரோமர் 7:4

நீங்கள் ஒரு காலத்தில் பக்தியுள்ள யூதனாக இருந்தால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குத் திருமணமானவர்களாக இருந்தீர்கள் என்று பவுல் கூறுகிறார். நியாயப்பிரமாணம் மரித்துவிட்டால் ஒழிய அந்த நியாயப்பிரமாணத்தை விட்டு விலகி இன்னொருவரை திருமணம் செய்வது,

விபசாரமாகும், ஆவிக்குரிய விபசாரம். ஆனால் இயேசுவின் சிலுவை மரணத்தினால் நியாயப்பிரமாணம், மரணத்துக்கு உட்படுத்தப்பட்டது.

பெரும்பாலான யூதர்களுக்கு இது ஒரு பிரச்சனையாகத்தான் இருக்கிறது. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சி செய்யாவிட்டால், (அடிப்படையில் அவர்கள் அதை நன்றாக செய்வதில்லை) தங்கள் "கணவனுக்கு" துரோகம் செய்வதாக நினைக்கிறார்கள். யூதர்களுக்கும், பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கும் நியாயப்பிரமாணம் கிறிஸ்துவுக்குள் மரணத்துக்கு உட்படுத்தப்பட்டதென்றும், அவர்கள் உயிரோடெழுந்த மேசியாவைத் திருமணம் செய்வதற்கு ஏதுவாக இது நடந்ததென்றும், வெளிப்பாடு ஏற்பட வேண்டும். அவர் மூலமாய், அவர்களும், நாமும் தேவன் நமக்கு முன்னதாக ஏற்படுத்திய கனி கொடுக்க முடியும்.

இணைப்பினால் தான் கனி உருவாகும். ஆனால் எதனோடே நாம் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதுதான் நாம் எப்படிப்பட்ட கனியைக் கொடுப்போம் என்பதைத் தீர்மானிக்கும். கிறிஸ்துவுடன் நாம் இணைக்கப்பட்டால், ஆவியின் கனியைக் கொடுப்போம். நாம் நியாயப்பிரமணத்துடன் இணைந்திருந்தால், மரணத்தின் பலனைக் கொண்டுவருவோம். பவுல் சொல்வது போல்:

> நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது. வசனம் 5

அது வியப்பூட்டும் வாக்கியமாக இருக்கிறது! நியாயப்பிரமாணத்தினாலே பாவ இச்சைகள் தோன்றின. வேறு விதமாக சொல்ல வேண்டுமானால், நியாயப்பிரமாணம் பாவ இச்சைகளை தூண்டியது என்று பவுல் சொல்லுகிறார். அதை கிரகிக்க முடிகிறதா? நியாயப்பிரமாணம் ஒருபோதும் நீதியை உருவாக்காது. அது அதிக பாவத்தை உண்டாக்குகிறது!

1 கொரிந்தியர் 15:56ல், பவுல் இன்னொரு ஆச்சரியமான அறிக்கைகளில் ஒன்றை கூறுகிறார்.

மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.

பாவத்தின் பலம் அல்லது வல்லமை நியாயப்பிரமாணத்திலிருந்து வருகிறது என்று பவுல் கூறுகிறார். இதன் பொருள் என்னவென்று புரிகிறதா? நியாயப்பிரமாணம் உண்மையில் பாவத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. அதனால்தான் சட்டத்தைக் கடைப்பிடிக்க முயற்சிப்பது நம் பாவத்தை ஒருபோதும் வெல்லாது. ஏன்? நாம் எவ்வளவு அதிகமாக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முயற்சிக்கிறோமோ அந்தளவுக்குப் பாவத்திற்கு அதிக வல்லமை கொடுக்கிறோம். இது ஒரு தோல்வியுற்ற போர். சட்டத்தைக் கடைப்பிடிக்க முயற்சிப்பது மரணத்தின் கனியைப் பிறப்பிக்கும்.

ரோமர் 7இல் பவுல் தொடர்ந்து பேசும்போது, நியாயப்பிரமாணத்தில் தவறு ஏதுமில்லை என்று கூறுகிறார். அது “பரிசுத்தமானது, நியாயமானது மற்றும் நல்லது” (வசனம் 12). பிரச்சனை நியாயப்பிரமாணத்தில் இல்லை, நமக்குள்தான் இருக்கிறது.

நான் அதை இப்படிச் சொல்வேன்: நியாயப்பிரமாணம் வெளியிலிருந்து கிரியை செய்கிறது. “இதைச் செய்யாதே, அதைச் செய்” என்று சொல்லுகிறது. இதனால் நாம் என்ன செய்ய வேண்டும் அல்லது செய்யக்கூடாது என்பதை நாம் தீர்மானிக்கிறோம். அப்படிச் செய்யும்போது, நம் சொந்தத் திறனை நம்புகிறோம். அதுதான் பிரச்சனை. நமக்குள், சரியானதைச் செய்யும் திறன் மற்றும் தவறானதைத் தவிர்க்கும் திறன் இல்லை. நம் மாம்சத்தின் இன்றியமையாத தன்மை, நம்மீது நம்பிக்கை வைப்பதாகும். நமது மாம்சம் தேவனை சார்ந்திருக்க விரும்பவில்லை.

பாவம் – தேவனை சாரா தன்மை

ஏதேன் தோட்டத்தின் சோதனைக்குப் போவோம். சாத்தான் பயன்படுத்திய ஊக்கம் என்ன? “நீங்கள் தேவனைப் போல இருப்பீர்கள்” (ஆதியாகமம் 3:5). தேவனைப் போல இருப்பதில் எந்த தவறும் இல்லை. பிரச்சனை என்ன? தேவனைச் சாராமல் அவர்கள் தேவனைப் போல இருப்பார்கள். நன்மை தீமையின் அறிவை மட்டுமே சார்ந்துகொள்வார்கள்.

மனித குலத்தின் அடிப்படை பிரச்சனையே இதுதான்: மதவாதிகளின் மூல பிரச்சனையும் இதுதான். நாம் தேவனைப் போல் இருக்க விரும்புகிறோம். ஆனால் தேவனைச் சார்ந்திருக்க விருப்பம் இல்லை. பாவத்தின் சாராம்சம் தேவனைச் சார்ந்திருக்க மறுப்பதுதான். அது தான் பாவத்தின் உண்மையான தோற்றம்— நாம் செய்கிற ஏதோ ஒரு குறிப்பிட்ட பாவச் செயல் அல்ல. சுயத்தையே சார்ந்துகொள்ளுகிற தன்மையினால், தேவனுடைய கிருபையை நம்

வாழ்க்கையிலிருந்து அடைத்துப் போடுகிறதே. இப்படிப்பட்ட சுய நீதி தான் உங்களிலும் என்னிலும் தேவன் சந்திக்க நேரிடுகிற மிக கடினமான குறை. "என்னால் செய்ய முடியும், எனக்குத் தேவன் தேவையில்லை."

எனக்குத் தெரிந்த வரையிலும் (இது என்னுடைய சொந்த கருத்து) தேவனைச் சார்ந்திருக்க விரும்பாத இரண்டே சிருஷ்டிகள் தான் உண்டு. ஒன்று கலகத்தில் சாத்தானுடன் சேர்ந்துகொண்ட விழுந்துபோன தூதர்கள், மற்றொன்று மனித குலம். இந்தப் பிரபஞ்சத்தில் வேறு எதுவும் தேவனைச் சாராமல் இருக்க விருப்பம் கொள்வதில்லை. பறவைகள் அதை விரும்புவதில்லை. சிருஷ்டிகள் விரும்புவதில்லை, மீன்கள் விரும்புவதில்லை, நட்சத்திரங்கள் விரும்புவதில்லை, அவைகள் எல்லாம் தேவனையே உற்சாகமாய் சார்ந்து கொள்கின்றன.

விழுந்துபோனதின் நிமித்தமும், ஜென்ம சுபாவத்தின் நிமித்தமும், நீங்களும் நானும் இந்த பிரச்சனையைச் சுதந்தரித்துக் கொண்டோம்: தேவனைச் சார்ந்திருக்க நாம் விரும்புவதில்லை. "நானே இதைச் செய்து விட்டேன், எனக்குத் தேவன் தேவையில்லை" என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

உண்மை என்னவென்றால், எல்லாவற்றிற்கும் மேலாக நமக்குத் தேவன் தேவையில்லை என்று நாம் நினைக்கும்போது தான், நமக்கு மிக மோசமாக தேவன் தேவை. நம்முடைய சொந்த கிறிஸ்தவ அனுபவங்களை நாம் பகுப்பாய்வு செய்தால், நாம் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சனையும் தேவன் இல்லாமல்

ஏதாவது செய்ய முயற்சிப்பதில் இருந்து உருவாகிறது என்று நான் நினைக்கிறேன். நமது தோல்விகள் தேவனின் கிருபையைச் சார்ந்திருக்க மறுப்பதில் இருந்து உருவாகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன் ரூத் மிகுந்த பெலவீனத்துடன் அறுவை சிகிச்சைக்காக ஒரு கத்தோலிக்க மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருந்தாள். வேதத்தை வாசிக்க விரும்பினாள் ஆனால மிகவும் பெலவீனமாக இருந்தபடியால், இயலவில்லை. அங்கே இருந்த மூத்த சகோதிரி 70 வயதிற்கும் மேற்பட்டவர், புதிதாக அனுமதிக்கப்பட்ட நோயாளிகளைச் சந்தித்து விசாரித்துக்கொண்டிருந்த அவர்கள் ரூத்தைப் பார்த்தார்கள். ரூத்தினுடைய கையில் அவளுடைய வேதாகமம் இருந்தது ஆனால் வாசிக்க முடியாத அளவிற்கு அவள் பெலவீனமாக இருந்தாள். இந்த அருமையான சகோதிரி அவளைப் பார்த்து, "உங்களுக்கு நான் ஏதாவது செய்யட்டுமா?" என்று கேட்டார்கள்.

"தயவு செய்து எனக்கு வேதத்தை வாசியுங்கள்" என்று ரூத் சொன்னாள்.

"நான் எந்தப் பகுதியை வசிக்கட்டும்?" என்று அந்தச் சகோதிரி கேட்டார்கள்.

"பிலிப்பியர் 2" என்று ரூத் பதிலளித்தாள்.

அந்த சகோதிரி, "இந்த வேத பகுதியை கொண்டுதான் நான் கன்னியாஸ்திரியாக பிரதிஷ்டை பண்ணப்பட்டேன்" என்றார்கள். அதனால் அவர்களுக்குப் பொதுவான ஒன்று இருந்தது.

அப்போது அந்த கத்தோலிக்க சகோதிரி நடந்த ஒரு சம்பவத்தை ரூத்துடன் பகிர்ந்து

கொண்டார்கள். கன்னியாஸ்திரிகளுக்கான ஒரு கூட்டத்திற்கு அவர்கள் போனார்களாம். அங்கே ‘ட்ராப்பிஸ்ட்’ (Trappist) என்கிற பிரிவிலிருந்து, ஒரு துறவி, பேச்சாளராக வந்திருந்தார். ட்ராப்பிஸ்ட்களுக்கு தங்கள் மடத்தில் பேசுவதற்கு அனுமதி கிடையாது. அவர்கள் மௌன விரதம் காப்பவர்கள். ஆனால் சில நேரங்களில் அவர்கள் வெளியே அனுமதிக்கப்படும்போது, தங்கள் மௌனத்திலே அவர்கள் கற்றுக் கொண்டவைகளை மக்களுக்கு போதிக்க அனுமதிக்கப்படுவார்கள். இந்த ட்ராப்பிஸ்ட் துறவி கத்தோலிக்க சகோதரிகளுக்குக் கற்பித்துக்கொண்டிருந்தார். மேலும் அவர் பகிர்ந்து கொண்ட ஒன்றை இந்த சகோதரி ரூத்துக்குக் கற்றுக்கொடுத்தார். அவர்கள் பகிர்ந்துகொண்டது எங்கள் இருவரிடமும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

பேசக்கூடாத ஒரு துறவி, கத்தோலிக்க சகோதிரிகளிடம் பேசுகிறார். ஆனால் இந்த செய்தி எனக்கு வந்து சேர்ந்தது. நான் அதைப் பல முறை என் செய்திகளில் சொல்லியிருக்கிறேன். இந்தச் செய்தி உலகத்தையே சுற்றி வந்துவிட்டது! அது உண்மையிலேயே எனக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது ஏனென்றால் தேவன் ஒரு காரியத்தைச் சுற்றிலும் அறிவிக்க வேண்டுமென்று நினைத்தால் அது நிச்சயம் அறிவிக்கப்படும். இதை யார் தீர்மானித்தது? தேவனை அல்லாமல் வேறொருவரும் இல்லை. இந்த துறவி சகோதிரிகளிடம் சொன்ன செய்தி இதுதான்: ‘மதிக்கப்படக்கூடாது, பாதுகாப்பாக இருக்கக்கூடாது, கட்டுப்பாட்டில் இருக்கக்கூடாது என்று ஆசைப்பட ஜெபியுங்கள்.’

நீங்கள் அதை ஜெபிப்பீர்களா? இதற்குக் கொஞ்சம் தைரியம் தேவை, இல்லையா? சிறிது நேரம் யோசித்துப் பாருங்கள். மதிக்கப்படக்கூடாது – அதைக் குறித்து எனக்குப் பிரச்சனை இல்லை. தனித்து செயல்படுவது – அதுவும் ஒரு தவறு என்று நான் கண்டுபிடித்தேன். பாதுகாப்பாக இருக்கக்கூடாது – என் பாதுகாப்பு தேவனிடம் இருப்பதாக நான் உண்மையாக நம்புகிறேன். ஆனால் எல்லாம் என் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டாம் என்று சொல்லுகிறதுதான் எனக்கு மிக கடினமாக இருந்தது. உண்மையிலேயே என் கட்டுப்பாட்டில் எல்லாம் இருப்பதை நான் விரும்பாமல் இருக்கிறேனா? வேறு விதமாக சொன்னால், தேவனே எல்லாவற்றையும் ஆளும்படி அவருக்கு நான் விட்டுக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேனா? அதுதான் முக்கியமானது. தேவன் ஆளுகை செய்யும்போது அது தான் கிருபை.

அந்தக் கன்னியாஸ்திரியை ஆசீர்வதிக்கிறேன். என் சிந்தனைக்கு அவர்கள் பங்களித்ததற்கு நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

தனித்து செயல்படுவதற்கான ஆசை

எல்லாராலும் மதிக்கப்பட வேண்டும். பாதுகாப்பாக இருக்க வேண்டும். யாரையும் சார்ந்திருக்க கூடாது என்கிற காரியங்கள்தான் மனித குலத்தின் அடிப்படை பிரச்சனை. எல்லா ஞானமும் உள்ள, அன்புள்ள தேவன் படைத்த இப்பிரபஞ்சத்தில் வாழ்ந்துகொண்டு அவரைச் சார்ந்திருக்கக்கூடாது என்பதுதான் பாவத்தின் உச்சக்கட்டம். தேவனைச் சார்ந்து, அவரை நம்

வாழ்வை தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் நம்மில் எவரும் தொடர்ந்து திருப்தி அடையவில்லை. அதுதான் உண்மையான விசுவாசப்பாதை. கிருபையின் பாதை. ஒரு சில மணி நேரங்களில் நாம் அதை சாதிக்க முடியாது.

நியாயப்பிரமாணத்துக்குத் திரும்புவோம். நியாயப்பிரமாணம் பாவத்தைத் தூண்டிவிடுகிறது என்று பார்க்கிறோம். ஏன்? ஏனென்றால் நியாயப்பிரமாணம் "உன்னால் செய்ய முடியும். உன்னையே சார்ந்து முன்னேறு. நீ செய்ய வேண்டியதெல்லாம் இந்தச் சட்டங்களைப் பின்பற்றுவது தான்" என்று சொல்லி உங்களை சுயத்தை சார்ந்துக்கொள்ளச் செய்கிறது. அப்படித்தான் நியாயப்பிரமாணம் நம்மை சுயத்தை சார்ந்துகொள்ள மோசம் போக்குகிறது. அப்படி செய்வதால் நம்மை வஞ்சிக்கிறது.

நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்: நியாயப்பிரமாணத்தில் தவறேதும் இல்லை. பவுல் ரோமர் 7ல், நியாயப்பிரமாணம் நல்லது, பரிசுத்தமானது, நீதியானது, என்று சொல்லுகிறார் (ரோமர் 7:12). பிரச்சனை நமக்குள்தான் இருக்கிறது—நம்முடைய ஜென்ம சுபாவத்தில், தனிப்பட்டு செயல்பட வேண்டும் என்ற வாஞ்சை உள்ளது.

உங்களில் பெரும்பாலானோர், ஒரு குழந்தையைக் கவனித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இரண்டு வயதாகும் போது இந்த வாஞ்சை மேலே உயர்ந்து வருகிறதைக் காண முடியும். இந்த அழகான இரண்டு வயது சிறுமியைப் பார்த்து, "இங்கே வா" என்று அழைக்கிறீர்கள், அவள் திரும்ப எதிர் திசையில் நடந்து போகிறாள்! நமக்குள் தன்னையே

வெளிப்படுத்துகிற பழைய ஜென்ம சுபாவம் அதுதான். இந்தப் பிரச்சனையை வெளியே கொண்டு வருவதற்கு தேவன் பயன்படுத்தும் கருவி நியாயப்பிரமாணம்.

நியாயப்பிரமாணத்திற்கான காரணத்திற்கு எளிய எடுத்துக்காட்டு இதோ. நீங்கள் மருத்துவரிடம் வயிற்று வலியோடு போனால், ஒரு நல்ல மருத்துவர், உடனே கையை நீட்டி மாத்திரைகளை எடுத்துக் கொடுக்க மாட்டார். உங்கள் வயிற்று வலியின் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க முயற்சி செய்வார். தெளிவாக சொன்னால், மருந்து எழுதி கொடுக்கும்முன் அவர் என்ன பிரச்சனை என்று கண்டடைய முயற்சிப்பார். அப்படித்தான் தேவன் நம்மோடு இடைபடுகிறார். நம்முடைய பிரச்சனையைக் கண்டறியாமல் அதற்கு ஒரு தீர்வை அவர் கொடுப்பதில்லை. நமது பிரச்சனை தோன்றும் இடம் பாவம் என்று அறிய வைக்கத் தேவனால் கொடுக்கப்பட்டதுதான் நியாயப்பிரமாணம். நோயறிதலை ஏற்றவுடன், அதற்கான தீர்வு என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ரோமர் 10:4இல், நாம் வாசிக்கிறோம்.

> விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.

ஆகையால் நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாய் மாறிவிட்டால், அது நியாயப்பிரமாணத்தின் முடிவு. எல்லாவிதத்திலும் நியாயப்பிரமாணத்தின் முடிவல்ல, ஆனால் நீதியைப் பெறுக்கொள்ள நியாயப்பிரமாணத்தின் முடிவு. தேவனிடத்தில் நீதியைப் பெறுவதற்கு

வழியாக இருந்த நியாயப்பிரமாணத்திற்கு கிறிஸ்து ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் மரித்தபோது நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி அதை முடிவுக்கு கொண்டுவந்தார். அவர் உயிரோடு எழுந்த போது, ஒரு புதிய வழியைத் தேவனிடத்தில் நீதியை பெறுவதற்குத் தந்தார்—விசுவாசத்தால்வாழ்வது என்று அறியப்படும் ஒன்று.

தேவனுடைய வார்த்தை என்ற முறையிலோ, இஸ்ரவேலின் சரித்திரத்தின் ஒரு பகுதி என்ற முறையிலோ அல்லது தேவன் மக்களோடு இடைப்படுகிற விதத்திற்கு எடுத்துக்காட்டாக இருப்பதற்கோ அது முடிவல்ல. நியாயப்பிரமாணம் இன்னும் இருக்கிறது. ஆனால் நீதியைப் பெறுவதற்கு ஒரு வழி என்பதற்கு, சிலுவையில் கிறிஸ்து இறுதியாக நியாயப்பிரமாணத்திற்கு ஒரு முடிவைக் கொண்டு வந்தார்.

கலாத்தியரின் பிழை:
நியாயப்பிரமாணத்தின் பிரச்சனை

கலாத்திய கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதிய கடிதத்தில் அவர் நியாயப்பிரமாணத்தின் பிரச்சினையை விரிவாகக் கையாளுகிறார். இறையியல் அடிப்படையில், பிரச்சனை சட்டவாதம். கலாத்தியர் ஒரு சுவாரஸ்யமான நிருபம். சபைகளுக்குப் பவுல் கடிதங்களை எழுதும் போது, பொதுவாக அதிலுள்ள நன்மையான காரியங்களுக்காக தேவனுக்கு உற்சாகமான நன்றியறிதலோடு துவங்குவார். ஒரு மனிதன் தன் தகப்பனுடைய மனைவியோடே வாழ்கிற காரியமும், தேவனுடைய பந்தியில் குடித்து வெறிப்பதும் இருந்து கொரிந்திய சபைக்கு எழுதும் போது கூட அவர் தேவனுடைய கிருபைக்காக

தேவனுக்கு உற்சாகமாக நன்றி செலுத்திதான் ஆரம்பம் செய்கிறார்.

ஆனால் கலாத்தியருக்கு எழுதும்போது, அவர் மிகவும் கோபத்தோடு பேசுகிறபடியினாலே, தேவனுடைய கிருபைக்காக நன்றி சொல்வதில் அவர் நேரத்தை செலவிடுகிறதில்லை. கலாத்தியரின் பிரச்சனை என்ன? குடிபோதை அல்ல, விபசாரம் அல்ல, சட்டவாதம். அவர்களுடைய நலனுக்கு குடிபோதை, விபசாரத்தைக் காட்டிலும் அதிக கேடு விளைவிக்கக்கூடிய காரியமாக பவுல் அதைக் கண்டார்.

தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள். தேவன் குடிபோதையையும், விபசாரத்தையும் தட்டிக்கொடுக்கிறார் என்று நான் நம்பவில்லை. ஆனால் சட்டவாதத்தைக் காட்டிலும் எளிதாக எதிர்கொள்ளக்கூடிய பிரச்சனை அது என்று தான் சொல்லுகிறேன். ஏனென்றால் சட்டவாதம் மறைமுகமானது. சட்டவாதம் நன்கென்று தோன்றுகிறபடியால், அதிலிருந்து விடுதலை பெறுவது கடினமாக இருக்கிறது. பவுல் சொல்லுகிறார்:

> உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவிடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.
>
> கலாத்தியர் 1:6—7

இந்த சபைக்கு நன்மையாக சொல்லுவதற்கு பவுலுக்கு ஒன்றுமே இல்லை. “நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்” என்று அவர் சொல்லுகிறார். எதற்குள்? சட்டவாதம்—சட்டங்களைக் கைக்கொள்வது. அதினாலே நீதி உண்டாகும் என்று நம்புகிறதற்கும்.

திரும்பவும் கலாத்தியர் 3ல் இதே விஷயத்துக்கு பவுல் திரும்புகிறார்:

> “புத்திக்கெட்ட கலாத்தியரே, உங்களை மயக்கினவன் யார்?”
>
> கலாத்தியர் 3:1

தேவ ஆவியால் நிரப்பப்பட்ட பெந்தெகொஸ்தே விசுவாசிகளுக்குப் பவுல் எழுதினார் என்பதில் சந்தேகமில்லை.

இந்த வசனத்தைப் பல ஆண்டுகளுக்கு முன் வசித்து, திடீரென்று “பெந்தெகொஸ்தே” அல்லது “ஆவியின் அபிஷேகத்தை” பெற்றிருக்கிற கிறிஸ்தவர்கள் மயக்கப்பட முடியும் என்று உணர்ந்ததை நினைவுகூறுகிறேன். இது என் மனதில் எழும்பி இருந்த ஒரு பெரிய பிரச்சனையை தீர்த்துவைத்தது ஏனென்றால் நான் போதகராக பொறுப்பேற்றிருந்த சபையில் இருந்த ஒரு சூழ்நிலையை எனக்கு விளக்கிற்று. முன்பு இருந்த போதகரின் மனைவியினால் முழு சபையும் மயக்கப்பட்டிருந்தார்கள் என்பதை நான் கண்டேன். அவள் தன் கணவரை விவாகரத்து செய்து விட்டு, சபையின் நிர்வாக குழு உறுப்பினர்களில் ஒருவரைத் திருமணம் செய்திருந்தார். இன்னும் சபையின் மக்களை ஆவிக்குரிய ரீதியில் கட்டுப்படுத்தி வந்தார்.

சட்டவாதம் மயக்குகிறது

பவுல் "மயக்கம்" என்ற வார்த்தையை தெளிவான அர்த்தத்தில் பயன்படுத்துகிறார். மயக்கப்பட்டிருப்பதற்கான கிரேக்க வார்த்தை "கண்ணினாலே அடிப்பது" என்பதாகும். இந்த சபை கண்ணினாலே அடிக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களை மயக்குகிற பார்வையின் கீழ் வந்திருக்கிறார்கள். கலாத்தியர்களைப் பொறுத்தவரை, அவர்கள் யூத சட்டத்தின் மேலாதிக்கம் பார்வையின் கீழ் வந்தனர். இது ஆவிக்குரிய மரணத்தைக்கொண்டு வந்தது.

அபிஷேகத்தைப் பெற்ற ஒரு கிரேக்க பாரம்பரிய குரு பல ஆண்டுகளுக்கு முன்பாக என்னைத் தொடர்பு கொண்டார். என்னிடம் ஜெபத்திற்காக வந்த அவர், "நான் மயக்கப்பட்டிருக்கிறேன். யாரோ என் மீது வண்கண் வைத்திருக்கிறார்கள்" என்று சொன்னார். அவர் தெளிவான ஒரு மனுஷன். வேதத்தை நன்கு அறிந்தவர். நான் அவருக்காக ஜெபித்தேன், அவர் விடுதலை பெற்றார்.

மயக்கப்படுவது நடக்கக்கூடிய ஒன்று என்று நீங்கள் அறிய விரும்புகிறேன். உண்மையைச் சொன்னால் அநேக இடங்களில் இது ஒரு சாத்திய கூறு. எனவே நான் இந்த ஆலோசனையை வழங்குகிறேன்: ஒரு சபையில் நீங்கள் புரிந்துகொள்ள முடியாத சில பிரச்சனைகளை எதிர்கொள்ளுகிறீர்கள் என்றால், மக்கள் மயக்கப்பட்டிருக்கலாம். ஒரு முழு தேவாலயமும் ஒரு தனிநபரின் கட்டுப்பாட்டுக்குள், அவர்களுடைய மேலாதிக்கப் பார்வையின் கீழ் வருவது சாத்தியம். இது

ஆவிக்குரிய மரணம், பயம் மற்றும் குழப்பத்தை உருவாக்கும்.

> புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே.
>
> கலாத்தியர் 3:1

"சிலுவையின் செய்தியை நான் உங்களுக்கு அறிவித்தேனே. நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்று உங்களுக்குக் காண்பித்தேனே. நீதியைப் பெறுவதற்கு வேறொரு அடிப்படைக்கு எப்படி நீங்கள் மாற்றப்பட்டிருக்க முடியும்?" என்று பவுல் கேட்கிறார்.

> ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறியவிரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?
>
> (வசனம் 2)

வேறு விதமாக சொன்னால்: "நீங்கள் ஒரு சில சட்டங்களைப் பின்பற்றினதினாலா, அல்லது செய்தியைக் கேட்டு அதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டதினாலா, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்றீர்கள்?" என்று பவுல் கேட்கிறார்.

அந்தக் கேள்வியை நான் உங்களிடம் கேட்கிறேன்: யாராவது குறிப்பிட்ட சட்டங்களைப் பின்பற்றினதினால் பரிசுத்த

ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றீர்களா? ஒருவருமே இல்லை என்பதுதான் பதில். அதை நாம் மனதில் கொள்ளவேண்டும். சில சட்டங்களைக் கைக்கொண்டதினால் நாம் இரட்சிக்கப்படவில்லை. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை நாம் சட்டங்களை பின்பற்றினதினால் பெற்றுக்கொள்ளவில்லை.

விசுவாசத்தோடு கேட்டதினால்தான் நாம் பெற்றுக்கொண்டோம் என்று பவுல் கூறுகிறார். விசுவாசத்தோடு செய்தியைக் கேட்டோம். நாம் கேட்டு, அதை விசுவாசித்தோம் அதனால் பெற்றுக்கொண்டோம். இதுவே எப்போதும் வேதாகம முறை: கேளுங்கள், செவி கொடுங்கள், நம்புங்கள் மற்றும் பெறுங்கள். இந்த மாதிரியில் நமது சொந்த முயற்சிக்கும், கிரியைக்கும் இடமில்லை.

> ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?
>
> (வசனம் 3)

இப்படிச் சொல்லும் போது அது புத்தியீனமாக தோன்றுகிறது அல்லவா? நீதியின் பாதையில் துவங்குவதற்கு பரிசுத்த ஆவியானவர் தேவையாயிருந்தால், அவரைச் சார்ந்திருப்பதை நாம் எப்படி விட்டுவிட முடியும்? உங்கள் சொந்த சட்டங்களை நீங்கள் எப்படி சார்ந்திருக்க முடியும்? ஆனால் இது அநேக சபைகளிலும், அநேக விசுவாசிகளிலும் மிகவும் உண்மையான பிரச்சனை.

நியாயப்பிரமாணம் சாபத்தை கொண்டுவரும்

கலாத்தியார் 3ல் பவுல் தொடருகிறார்:

> நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.
>
> (வசனம் 10)

நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நீதியுள்ளவர்களாக வேண்டுமானால், எப்போதும் நியாயப்பிரமாணத்தை முழுவதுமாய் கைக்கொள்ள வேண்டும். நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சித்து, அதை எப்போதுமே கைக்கொள்ளாமல் போனால், இந்தச் சாபத்துக்கு கீழ் வருகிறீர்கள்: "நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன்."

சுவிசேஷ சபை மற்றும் அபிஷேகம் பெற்ற சபை விசுவாசிகள் சாபத்தின் கீழ் வருவது சாத்தியமா? இது மிகவும் சாத்தியமான காரியம். என் சொந்த அனுபவத்திலிருந்து நான் இதை அறிந்திருக்கிறேன்.

பல ஆண்டுகளுக்குமுன், கிறிஸ்துவின் சரீரத்தில், பரிசுத்த ஆவியானவரினால் துவக்கப்பட்ட ஒரு இயக்கத்தின் பகுதியாக நான் இருந்தேன், நாங்கள் யாருமே எதிர்பார்க்காத

வேலையில் ஒருமனப்பட்டிருந்தோம். என்னோடு மூன்று பிரபலமான பிரசங்கியார்களைத் தேவன் இணைத்தார். இது தேவனுடைய இறையாண்மையின்படியான செயல். நாங்கள் ஆவியில் ஆரம்பம் செய்தோம் ஆனால் வெகு சீக்கிரம் நாங்கள் மாம்சத்தில் முடிவு பெற்றோம். விளைவுகள் பயங்கரமாக இருந்தன. ஆகையால் இது உண்மையென்று நான் அறிவேன். தேவன் தம்முடைய கிருபையினால் என்னை அதிலிருந்து வெளியே கொண்டுவந்தார்.

இது கடந்த காலத்தில் எப்பொழுதோ நடந்த ஒரு சம்பவம் அல்ல. இது இன்றும் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. ஆவியில் ஆரம்பம் பண்ணி, பின்பு தங்கள் மாம்ச சுபாவத்தினாலே பூரணமடைய நாடுகிறவர்கள் சாபத்திற்குக் கீழ் வருகிறார்கள்.

மாம்சத்தை நம்புவது

எரேமியா 17:5 ஐ கவனியுங்கள்:

மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

“கர்த்தரை விட்டு விலகுகிற இருதயம்” என்று சொல்லுகிறதினாலே, அப்படிப்பட்ட மனுஷன் தேவனோடு உறவு கொண்டிருந்தான் என்பது தெளிவாகிறது. ஆனால் அப்படிப்பட்ட உறவைப் பெற்றபின் அவன் மனுஷனை நம்ப ஆரம்பித்தான். தன்னையே நம்பினான். அதின் விளைவாக, அவன் இருதயம் கர்த்தரை விட்டு விலகிப்போனது.

கிறிஸ்தவ சபையின் பெரும்பாலான பகுதியில் இது சம்பவித்திருக்கிறதென்று நான் நினைக்கிறேன். இன்றைக்கு உள்ள, பிரபலமான சபை பிரிவுகள் தேவனுடைய சித்தத்தினாலும், கிரியையினாலும், கிருபையினாலும் உருவாக்கப்பட்டன. தேவனுடைய இறையாண்மையை அல்லாமல் அவர்கள் ஒன்றுமில்லாமல் போயிருப்பார்கள். ஆனால் அவைகளில் எத்தனை இன்றும் தேவனுடய கிருபையினாலே தொடருகின்றன? மிக குறைவானவையே என்று நான் சொல்லுவேன். ஆகையால் அவர்கள் எரேமியா 17:5இல் சொல்லப்பட்ட சாபத்தின் கீழ் தங்களையே கொண்டுவந்துள்ளன: “மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன்.”

இதை என் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து நான் உங்களுக்கு எடுத்துக்காட்டட்டும். எருசலேமிலே எனக்கும் ரூத்துக்கும் இருந்த வீட்டை விற்க தீர்மானம் செய்து, நாங்கள் நில விற்பனையாளர்களிடம் சென்றோம் அவர்கள், “இது அழகான வீடு ஆகையால் சீக்கிரம் விற்றுத்தீரும்” என்று சொன்னார்கள். 14 மாதங்களாக அது விற்கவே இல்லை. எங்களுக்கு புரியவில்லை. ஒரு நாள் நான் கிரைஸ்ட் சர்ச்சின் (Christ Church –எருசலேமிலே நாங்கள் பங்கேற்கிற சபை) ஒரு ஆராதனையில் கலந்து கொண்டபோது அங்கே இருந்த போதகர், “அசுத்த ஆவிகளிலிருந்து விடுதலை பெற ஒரு மனிதனுக்காக நான் ஜெபிக்க வேண்டும்” என்று சொன்னார். இப்படிப்பட்ட

பேச்சை எல்லா போதகர்களும் பேசுவதில்லை. ஆனால் இந்தப் போதகர் பேசுவார். ஆகையால் தான் அவரை எங்களுக்கு மிகவும் பிடிக்கும்! இவருக்கு உதவி செய்வது நலமாயிருக்கும் என்று நான் நினைத்தேன்.

நான் கூட சென்றேன், அந்த மனிதனைச் சந்தித்தோம். அவர் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஒரு பிஷப் இட்ட சாபத்தினாலே பாதிக்கப்பட்டிருந்த ஒரு ஆப்பிரிக்க மிஷனரி. அவர் மரிக்கும் தருவாயிலிருந்தார். நாங்கள் அவருக்கு ஊழியம் செய்தோம். பல அசுத்த ஆவிகளிலிருந்து அவருக்கு விடுதலை கிடைத்தது.

அதற்குப் பின் தன் வாழ்க்கையைக் குறித்து அவருக்கு இருந்த மனநிலையைக் குறித்து நாங்கள் இடைப்பட ஆரம்பித்தோம். “நீங்கள் உங்களையே நம்புகிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் தேவனுடைய கிருபையைச் சார்ந்துகொள்ளவில்லை” என்று நான் அவரிடம் சொன்னேன். “எனக்கு அந்தப் பிரச்சனை இருந்திருக்கிறது” என்று சொன்னேன். இதைச் சொல்ல நான் திட்டமிடவில்லை ஆனால் என் வாயிலிருந்து எப்படியோ வந்துவிட்டது. “எங்கள் வீட்டை விற்பதில் நான் செய்ய கூடியதை நம்பினதினால், என்னையே நான் சார்ந்துகொண்டதினால் இந்தப் பிரச்சனை எனக்கு இருந்தது.”

அங்கிருந்த எல்லா மக்களுக்கும் முன்பாக தனக்குறிய சிறந்த குணத்தினால், ரூத் என்னை பார்த்து, “அப்போது நீங்கள் சாபத்துக்கு கீழ் இருக்கிறீர்கள்” என்று சொன்னாள்.

“சரி தான், நான் சாபத்துக்கு கீழ் இருக்கிறேன்” என்று ஒப்புக்கொண்டேன். ஆகையால் நான் அதை அறிக்கையிட்டு, மனந்திரும்பி, சாபத்திலிருந்து என்னை விடுவித்துக்கொண்டேன். அந்தக் கூட்டத்தை முடித்து விட்டு, நாங்கள் தங்கியிருந்த புதிய அபார்ட்மெண்ட்க்கு வந்தபோது, கீழ் தளத்தில் ஒரு நில விற்பனையாளரைச் சந்தித்தோம். அவர் “என்னுடைய வாடிக்கையாளர்களுக்கு உங்கள் வீட்டைக் காண்பிக்க விரும்புகிறேன்” என்று சொன்னார். இரண்டே வாரங்களுக்குள் வீடு விற்று தீர்ந்தது. புரிகிறதா? மாம்சத்தை நம்புவதினால் உண்டான சாபத்திலிருந்து நான் விடுவிக்கப்பட்ட அந்த நொடியே, தேவன் எனக்காக கிரியை செய்ய முடிந்தது.

பரிசுத்தமாய் இருங்கள்

நான் சுருக்கமாகச் சொல்கிறேன். பின்னர் நேர்மறையானதைப் பார்ப்போம். நியாயப்பிரமாணம் வெளியில் இருந்து செயல்படுகிறது. நம்மை நம் சொந்த திறனுக்கு விட்டுவிடுகிறது என்பதை மீண்டும் மீண்டும் சொல்கிறது நல்லது. கிருபை உள்ளிருந்து செயல்படுகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட திறனை வழங்குகிறது. கிருபையால் மட்டுமே கிறிஸ்துவுக்குள் நாம் ஜெயமாக வாழமுடியும்.

லேவியராகமம் 11:44லும் 1 பேதுரு 1:16லும், “பரிசுத்தராயிருங்கள்” என்ற கட்டளை நமக்கு உண்டு. இது புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் தேவனிடத்திலிருந்து வரும் கட்டளை.

லேவியராகமம் 11இல் நீங்கள் வாசிக்கும் போது, எதையெல்லாம் சாப்பிடலாம் எதையெல்லாம் சாப்பிடக்கூடாது என்கிற விவரமான சட்டங்களுக்குப்பின் அது வருகிறது. அப்படியென்றால் என்ன? நீங்கள் பரிசுத்தமாயிருக்க வேண்டுமானால் அந்தச் சட்டங்களை எல்லாம் கைக்கொள்ள வேண்டும்.

ஆனால், 1 பேதுரு 1:16இல் இது எந்தச் சட்டங்களோடும் இணைந்ததல்ல. செய்தி இதுதான் "பரிசுத்தமாயிருங்கள்." இது இயேசுவிடமிருந்து வந்த செய்தி: "என்னுடைய பரிசுத்தத்தை நான் உன்னில் வாழ்ந்துகாட்டட்டும்." இது முற்றிலும் வேறுபட்டது. இனிமேல் நம்முடைய சுய முயற்சிகளைச் சாராமல், நாம் செய்ய முடியாததை தேவனுடைய மற்றும் இயேசுவினுடய கிருபை நமக்குச் செய்யும்படியாக சார்ந்துக்கொள்வதுதான். முடிவு நம்முடையது.

நீதியாக நிறைவேற்றும்

ரோமர் 8ல் நாம் நீதியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் நேர்மறையான பக்கத்தைக் கருத்தில் கொள்ள ஆரம்பிக்கிறோம். நியாயப்பிரமணத்தில் எந்தத் தவறும் இல்லை என்று பவுல் இங்கே கூறுவதைக் கவனத்தில் கொள்ளுங்கள். நமது பலவீனம்தான் தவறு.

> அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி

நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.

ரோமர் 8:3—4

இப்போது, முக்கியமான கேள்வியை இது எழுப்புகின்றது. நியாயப்பிரமாணத்தின் நீதியான நிறைவேறுதல் என்ன? அதை நீங்கள் சிந்தித்து பார்த்திருக்கிறீர்களா? மூன்று எழுத்துக்கள் கொண்ட வார்த்தையில் இதற்குப் பதில் அளிக்க முடியும். அதுதான் "அன்பு." அன்பு நியாயப்பிரமாணத்தின் நீதியான நிறைவேறுதலாக இருக்கிறது. அதை ஒரு சில வசனங்களின் மூலமாய் உங்களுக்கு நான் காண்பிக்கப் போகிறேன்.

மத்தேயு 22ல் ஒரு நியாயசாஸ்திரி இயேசுவைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிறார் — உங்களுக்கு சட்டதிட்டங்களைப் படித்திருக்கிறவர்களின் மனதைத் தெரியும். குறிப்பிட்டக் கேள்வி கேட்டார், அதற்கு இயேசு உடனடியான, குறிப்பிட்ட பதிலைக் கொடுத்தார்.

அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே.

மத்தேயு 22:35—39

இதிலே முக்கியமான வார்த்தை அன்பு: தேவன் பேரில் வைக்கும் அன்பு, பிறன்மேல் வைக்கும் அன்பு.

> அதற்கு பின் இயேசு, “இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்.” (வசனம் 40) என்றார்.

எனக்கு வேர்க்க துவங்குகிறதென்று வைத்துக்கொள்வோம். நான் என் கோட்டை கழற்றி அதை மாட்டி வைக்க விரும்பினால், எனக்கொரு ஆணி தேவையாக இருக்கும். நான் என் கோட்டை அதின் மீது தொங்க விடுவதற்கு முன்பே அந்த ஆணி அங்கே இருக்க வேண்டும். இந்தக் கட்டளைகள்தான் அந்த ஆணி, அதன் மீது நியாயப்பிரமாணம் முழுவதும், தீர்க்கதரிசனங்களும் தொங்குகின்றன. விளக்கமாகச் சொன்னால், நீங்கள் நியாயப்பிரமாணம் முழுவதையும், தீர்க்கதரிசனங்களையும் வாசித்து முடித்திருந்தால், அவைகள் சொல்லுகின்றன, தேவனை நேசி உன் அயலானை நேசி. அது தான் நியாயப்பிரமாணத்தின் நீதியான நிறைவேறுதல்.

நேசிக்க கடமைப்பட்டவர்கள்

அதற்கு பின் ரோமர் 13, பவுல் சொல்லுகிறார்:

> ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். ரோமர் 13:8

கடன்படாமல் இருப்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் மீள முடியாத ஒரு கடன்

உண்டு: சக கிறிஸ்தவர்களை நேசிப்பது, சக மனிதர்களை நேசிப்பது. அது என் கடமை. அந்தக் கடமையில் தொடர்ந்து நான் கடன்பட்டிருக்கிறேன், அதிலிருந்து நான் மீண்டு வர முடியாது.

பவுல் தொடருகிறார்:

எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக்கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது. அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது.

வசனம் 9—10

கலாத்தியர் 5ல் பவுல் இதை மறுபடியும் குறிப்பிடுகிறார்:

உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்.

கலாத்தியர் 5:14

விசுவாசமும் அன்பும்

மீண்டும் கலாத்தியர் 5ல் 6ஆம் வசனத்தில் பவுல் கூறியது:

கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்த சேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும். வசனம் 6

விசுவாசம் எப்படி கிரியை செய்கிறது சொல்லுங்கள்? அன்பினாலே. யாக்கோபு அதை இப்படிச் சொல்கிறார்:

> "கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது"
>
> யாக்கோபு 2:26

விசுவாசம் அன்பினால் கிரியை செய்கிறது என்பதினாலும் (காலத்தியர் 5:6) கிரியையில்லாத விசுவாசம் செத்ததென்பதினாலும் (யாக்கோபு 2:26), நாம் இந்தச் சமன்பாடுக்கு வருகிறோம்: அன்பில்லாத விசுவாசம் செத்தது. அதிர்ச்சியூட்டும் வாக்கியமாக இருந்தாலும் இது முற்றிலும் உண்மை. உங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் விசுவாசம் இருக்கலாம். ஆனால் உங்கள் வாழ்க்கையில் அன்பு இல்லையென்றால், அது செத்த விசுவாசம் (1 கொரிந்தியர் 13:2ஐப் பாருங்கள்).

1 தீமோத்தேயு 1ல் நாம் வாசிக்கிறோம்:

> கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. இவைகளைச் சிலர் நோக்காமல் வீண்பேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப்போனார்கள்.
>
> 1 தீமோத்தேயு 1:5—6

ஒரு ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பு இப்படியாக கூறுகிறது: "நம்முடைய போதனையின் இலக்கு அன்பு." அதை வாசிக்கும்போது, "என் போதனையின் நோக்கம் இதுதானா" என்று நான் என்னையே கேட்டது உண்டு. "அன்பான மக்களை உருவாக்க உண்மையிலே நான் முயற்சிக்கிறேனா?"

எனது ஊழியத்தில் எனக்குக் கீழ் அமர்ந்திருக்கும் சிலரைப் பற்றி நினைக்கும் போது, நான் அன்பைக் கற்றுக் கொடுத்திருக்கிறேனா என்று சில சமயங்களில் நான் சிந்திப்பதுண்டு. ஏனென்றால் நான் ஒரு போதகர் அல்லது ஆசிரியர். ஆசிரியர் ஞானத்தை தான் பகிர்ந்து அளிக்கிறார். ஞானம் ஜனங்களை பெருமையுள்ளவர்களாக மாற்றுகிறது என்று வேதம் கூறுகிறது (1 கொரிந்தியர் 8:1). எனக்கிருக்கிற எல்லா பெலத்தோடும் பெருமைக்கொள்ளாதவர்களை என் போதகத்தின் மூலமாய் உருவாக்க முயற்சித்திருக்கிறேன். நம்முடைய போதனையின் இலக்கு எப்போதுமே அன்பாகவே இருக்க வேண்டும்.

அன்பில் வளருவது

அதன் பின், அந்த இலக்கிலிருந்து விலகினால் நீங்கள் செய்வதெல்லாம் வீண் "பேச்சாயிருக்குமென்று" பவுல் சொல்லுகிறார்.

நாம் அறிந்திருக்கிற சபையை சிந்தித்துப் பார்ப்போம். சபையில் எவ்வளவு வீண் பேச்சு நடக்கின்றது? அன்பை உருவாக்காத எவ்வளவு பிரசங்கம், போதனை மற்றும் கிரியைகள்? அது அன்பை உருவாக்காவிட்டால் எல்லாம் வீணான முயற்சியாக இருக்கிறது. முற்றிலும் பயனற்றதாய் இருக்கிறது.

நீங்கள் எந்த விதமான ஊழியத்திலும் ஈடுபட்டிருந்தாலும், உங்கள் நோக்கங்களைச் சோதித்துப்பார்க்க உங்களுக்கு நான் சவால் விட விரும்புகிறேன். நீங்கள் உருவாக்க முயற்சிப்பது என்ன? இரண்டாவதாக, அன்பை உருவாக்க முயற்சி செய்தால், அதை நீங்கள்

உருவாக்கிக்கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் அன்பை உருவாக்க முயற்சிக்கா விட்டால், உங்கள் பேச்செல்லாம் வெறுமையான வார்த்தைகள்தான். அது மிக தூரம் எட்டுகின்ற ஒரு வாக்கியம்.

நியாயப்பிரமாணம் நம்மைப் பயத்தினால் ஊக்குவிக்கிறது ஆனால் இயேசு நம்மை அன்பினால் ஊக்குவிக்கிறார். அவர், "என்னை நேசித்தால் நீங்கள் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுவீர்கள்" (யோவான் 14:15) என்று சொல்லுகிறார். பயம் சரியான பலன்களை ஏற்படுத்துவதில்லை. கிறிஸ்தவத்தின் சில தோற்றங்கள் உட்பட, பல மதங்கள் ஜனங்களைப் பயத்தினாலே ஊக்குவிக்கின்றன. ஆனால் அதின் விளைவுகள் பயங்கரமாக இருக்கின்றது.

இறுதியாக, அன்பின் கீழ்ப்படிதல் முன்னேற்றத்திற்குரியதாய் இருக்கிறது. நீங்கள் அன்பில் பிழையற்றவர்களா? என்னுடன் சேர்ந்துக்கொள்ளுங்கள்; நானும் அன்பில் பிழையற்றவன் அல்ல. இருப்பினும், நியாயப்பிரமாணத்தின் அன்பு நிபந்தனையை நான் இன்னும் நிறைவேற்றவில்லை என்றாலும், நான் நீதிமானாக எண்ணப்படவில்லை என்று அதற்கு அர்த்தம் அல்ல. ஏனென்றால், இலக்கை நாம் எட்டும் வரை நம்முடைய விசுவாசம் நமக்கு நீதியாக எண்ணப்படுகிறது (ரோமர் 4:5ஐ பார்க்கவும்). நீங்கள் தொடர்ந்து நம்புகிற வரையிலும், உங்கள் விசுவாசம் உங்களுக்கு நீதியாக எண்ணப்படுகிறது.

கடைசி பந்தியின் போது, இயேசு பேதுருவுக்குச் சொன்ன வார்த்தைகளில் இது வெளியாகிறது. "பேதுருவே என்னை மூன்று தரம் மறுதலிப்பாய்" என்று அவர் சொன்னார்.

"நான் அல்ல, என்றைக்கும் நடக்காது" என்று பேதுரு சொன்னார்.

அப்பொழுது இயேசு, "உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடி உனக்காக நான் வேண்டிக்கொண்டேன்" (லூக்கா 22:32) என்று சொன்னார். முக்கியமானது என்னவென்றால் நம்முடைய விசுவாசம் ஒழிந்துபோகக் கூடாது. நாம் பல தவறுகளைச் செய்யலாம். பாவங்களைக் கூட செய்யலாம். நாம் இன்னும் இலக்கை வந்தடையவில்லை. நாம் பிழையற்றவர்கள் அல்ல. ஆனால் நாம் தொடர்ந்து விசுவாசிக்கும் வரையிலும், நாம் வந்தடையும் வரை, நம்முடைய விசுவாசம் நமக்கு நீதியாக எண்ணப்படுகிறது.

அன்பு விடுதலையை கொண்டுவருகிறது

யாக்கோபின் புஸ்தகத்திலிருந்து, நான் அதிகமாக நேசிக்கும் ஒரு வசனத்தை சொல்லி முடிக்கிறேன்.

> சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.
>
> யாக்கோபு 1:25

சுயாதீனப்பிரமாணத்தின் பூரணப்பிரமாணம் என்ன? அன்பு. நீங்கள் நேசித்தால், உண்மையாக நேசியுங்கள். நீங்கள் மட்டும்தான் உண்மையான பூரண சுயாதீனம் உள்ளவர்கள். ஏனென்றால் நீங்கள் என்ன செய்ய விரும்பினாலும் செய்யலாம்.

நீங்கள் மக்களை எப்போதும் நேசிக்கலாம். அவர்கள் உங்களை அவமானப்படுத்தலாம், உங்களைத் துன்புறுத்தலாம், உங்களைக் கொலை செய்யக்கூட முயற்சிக்கலாம். ஆனால் நீங்கள் அவர்களை நேசிப்பதை ஒருபோதும் அவர்கள் தடை செய்ய முடியாது. யாருடைய ஒரே ஊக்கம் அன்பாய் இருக்கிறதோ, அவர்கள்தான் உலகத்திலேயே பூரணமான விடுதலையைப் பெற்றவர்கள்.

பிதாவே, நீதியானது விசுவாசத்தினால் உம்மிடமிருந்து கிருபையால் பெறப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள எனக்கு உதவி செய்யும். நான் என்ன செய்ய முடியும் என்பதன் மூலம் இது செயல்படவில்லை. என் சொந்த பெலத்தில் அல்லாமல் உம்மில் நம்பிக்கை வைக்க எனக்கு உதவி செய்யும்.

என்னில் உள்ள இயேசு தம்முடைய பரிசுத்தத்தை என் மூலமாக வாழ்ந்து காட்டுகிறார் என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன். என் விசுவாசம், உம்மிடம் நான் வைத்திருக்கும் அன்பையும், என் அண்டை வீட்டாரிடம் வைத்திருக்கும் என் அன்பையும் உறுதிப்படுத்துகிறது.

நான் உம்மை நேசிக்கிறேன், ஆண்டவரே. என் செயல்திறன் அல்ல, என் விசுவாசம் உமக்கு முன்பாக நீதியாகக் எண்ணப்படுகிறதற்காக நன்றி.

ஆமென்.

எழுத்தாளரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915–2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் பெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரேய பல்கலைக்கழகத்தில் எபிரேய மற்றும் அராமிய மொழிகளை உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய போது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்த சந்திப்பில் இருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார்; இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும் கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபை பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது போதனையை அனைத்து இன மற்றும்

மத பின்னணியிலிருந்தும் மக்களுக்குச் சமமாக பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார், அவற்றில் பல, 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷியன், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது, ‘இயேசு திரும்பும் வரை’ தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது. இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப் பற்றிய தற்போதைய தகவலுக்கு,

இங்கு செல்க:www.derekprince.com

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

For orders, prayer requests & other enquiries
please contact :

DERK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

You can also send your offerings and contributions
towards this ministry to the above address.

Visit our WEBSITE:

www.derekprince.com/ta